557

# குமரிமலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

50

# உணவுச் சிறப்பு

## காமதேனு வனஸ்பதியினால் இன்னும் உயர்வடைகிறது

உப்பு பக்ஷணங்கள், இனிப்புப் பண்டங்கள் காமதேனு வனஸ்பதியில் தயார் செய்தால் நல்ல ருசியாய் இருக்கும். நெய் போன்றது; விலை குறைவானது.

கண்பார்வைக்குத் தேவை யானதும். சரும உபாதைகளைப் போக்க வல்லதுமான விடமின் 'A' கலக்கப் பெற்றது.

தயாரிப்பு :

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்டிரியல் கார்ப்பொரேஷன் லிட்.,


மேட்டூர் அணை, சேலம் ஜில்லா.

மானேஜிங் ஏஜெண்ட்ஸ் :

சேஷசாயி பிரதர்ஸ் (பிரைவேட்) லிட்.


சுவர்ண மாளிகை
P.A. ராஜு செட்டியார் & பிரதர்
கோயமுத்தூர்
P-1-49

# ANNOUNCEMENT.



## "TEXTOOL"

**TAKES PRIDE TO ANNOUNCE**
**THAT THEIR 4 CYLINDER**
**36 To 86 H. P.**
**AUTOMOTIVE DIESEL ENGINES**

will be out in the market Soon!!

Await Further News !!!

MANUFACTURERS:-

**Textool Company Limited,**
**Post Box No. 221,**
COIMBATORE.

Phone: 409 / 1409

Gram: 'TEXTOLCO'


Vummidiars
JEWELLERY &
SILVERWARE
FAMOUS SINCE 1900
VUMMIDI
RAMIAH CHETTY
GURUSWAMY CHETTY & CO.
JEWELLERS
23-25, CHINA BAZAAR ROAD
MADRAS

மலர் 16 இதழ் 1

விகாரி - சித்திரை

# உள்ளுறை

பக்கம்

1. தியாகி ஆசார்யா பன்ஸாலி
—மகாதேவ தேசாய் 1

2. பிரிட்டனிலுள்ள நூலகங்கள்
—டென்னிஸ் பார்டன்ஸ் 19

3. கொய்த மலர்கள் 22

4. பிரிட்டிஷ் விவசாயக் கூட்டுறவு சங்கம் 34

5. முன்னேற்றத்தின் ரகசியம்
—ராஜாஜி 48

6. எங்கள் கல்விச் செலவு
—க. பிரேமா 57

7. திருச்சி மலைக்கோட்டை
—ஏ. கே. செட்டியார் 66

# தியாகி ஆசார்யா பன்ஸாலி

மகாதேவ தேசாய்

*[உண்ணாவிரதத்தால் பிரிட்டிஷ் அரசாங்கத்தைப் பணிய வைத்த மகான் பன்ஸாலிக்கும் காந்தியடிகளுக்கும் நடைபெற்ற சம்பாஷணையை, மகாதேவ தேசாய் 1935 ஆம் ஆண்டில் 'ஹரிஜன பந்து' என்ற குஜராத்தி பத்திரிகையில் எழுதினார். அதன் தமிழ் மொழி பெயர்ப்பு அப்பொழுது 'தினமணி'யில் வெளியாயிற்று. அதனையே இங்கு வெளியிடுகிறோம்.]*

ஸ்ரீ ஜயகிருஷ்ண பன்ஸாலி ஒரு சமயத்தில் எங்களுடன் சபர்மதியில் இருந்தார். மற்றொரு சமயம் அவர் திடீரென்று வர்தாவுக்கும் வந்தார்.

பன்ஸாலி பம்பாய் சர்வகலாசாலையில் எம். ஏ. பரீட்சைக்குப் படித்து வந்தார். நல்ல உற்சாக முள்ளவர். மேலும் படிக்கவேண்டுமென்ற ஆவல் அவருக்கு இருந்தது 1921 ஆம் ஆண்டில் காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்து நடத்தி வருகையில், பன்ஸாலி தமக்கு அளிக்கப் பெற்று வந்த உபகாரச் சம்பளத்தையும் படிப்பையும் விட்டு விட்டு காந்தியடிகளிடம் வந்தார். பின்னர் குஜராத் வித்தியா பீடத்தில் ஆசிரியராகப் பணியாற்றினார். நாளடைவில் சிறைக்கும் சென்றார். அவர் செல்வந்தர்களைப் போல நடத்தி வந்த ஆடம்பர வாழ்க்கையைச் சிறையில்தான் கைவிட்டார். அங்கேதான்

'ஆத்ம தரிசனம்' (தனது நிறை குறைகளை ஆராய்ந்து கொள்வது) காணவேண்டுமென்ற அவா அவருக்கு ஏற்பட்டது.

இந்தியப் புரட்சி இயக்கத் தலைவர்களில் ஒருவரான ஸ்ரீ சியாம்ஜி கிருஷ்ண வர்மா, பன்ஸாலியின் தாய் மாமன். ஸ்ரீ வர்மா இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் வசித்து வந்தார். தனக்குப் பின்னர் தன்னுடைய இடத்தில் பன்ஸாலி இருக்கவேண்டும் என்று அவர் விரும்பினார். எனவே பன்ஸாலியை ஐரோப்பாவுக்கு வரும்படி அழைத்தார். பன்ஸாலி ஐரோப்பாவுக்குச் சென்றார். ஆனால் வெகு சீக்கிரத்திலேயே இந்தியாவுக்குத் திரும்பி விட்டார். அங்கு அவர் கண்ட காட்சிகளும் நாகரிகமும் அவரை நடுங்க வைத்துவிட்டன.

இந்தியாவுக்குத் திரும்பியதும் 'ஆத்ம தரிசன' சாதனைகள் செய்து வந்தார். அந்தச் சமயத்தில்தான் அவர் சபர்மதியில் சில ஆண்டுகள் தங்கினார். அப்பொழுது அடிக்கடி உண்ணாவிரதம் இருந்தார். அவருடைய கடைசி உண்ணாவிரதம் ஐம்பத்தைந்து நாட்கள் நீடித்தன. அதன் பின்னர் நாங்கள் நடத்தும் வாழ்க்கை அவருக்குப் பிடிக்கவில்லை. ஒரு நாள் அவர் ஆசிரமத்தை விட்டுக் கிளம்பி விட்டார்.

அதன் பின்னர் தம் உடலுக்குத் துன்பம் விளைவித்துக் கொள்ளப் பயின்றார். கெட்டியான செப்புக் கம்பியினால் தன் இரு உதடுகளையும் தைத்துக் கொண்டார். தான் அணிந்திருந்த உடைகளைக் கழற்றி எறிந்து விட்டு, கோணியினால் ஆக்கப்பட்ட ஒரு கோவணத்தையும், இடுப்பில் ஓர் இரும்புப் பட்டையையும் மட்டுமே அணிந்து கொண்டார். பிச்சை வாங்கி உண்டு வந்தார்.

1934 ஆம் ஆண்டில் காந்தியடிகள் ஹரிஜன யாத்திரை செய்து வருகையில் பன்ஸாலி காந்தியடிகளைப் பவநகரில் சந்தித்தார். பல ஆண்டுகளாக அவர் பேசா விரதம் மேற் கொண்டார். அவர் எவருடனும் ஒரு வார்த்தைகூடப் பேசுவதில்லை. தன்னுடைய ஆத்மார்த்திக சம்பந்தம் (உறவு) இப்பொழுது மிகவும் நெருங்கி வருவதாக அவர் உணர்ந்தார். காந்தியடிகளுக்குப் பின்வரும் கார்டு ஒன்றை எழுதினார்.

"உங்களுடன் பேசுவதற்காக மாத்திரம் என் மௌன விரதத்தை முடிக்க வர்தாவுக்கு நடந்து வந்து உங்களைக் காணவேண்டுமென்ற ஆவல் எனக்கு இருக்கிறது. நடந்து வந்து உங்களைச் சேர்வதற்குச் சில மாதங்கள் ஆகும்."

காந்தியடிகளின் அலுவல்கள் நிச்சயமற்றதாக இருந்ததால், இந்தச் சந்திப்பு ஏற்படாதென்று நான் பயந்தேன். ஆனால் தியாகி பன்ஸாலிக்கு அம்மாதிரியான பயம் ஏதுமே இல்லை. பாதங்களிலும் உடம்பிலும் ஏதும் இன்றி அவர் இங்கு வந்து சேர்ந்தார். மாதக் கணக்காக அவர் நடந்து வந்திருக்கிறார். தன்னுடையது என்று கூறிக் கொள்ள இந்த உலகில் அவருக்கு ஏதுமே இல்லை.

அவர் ஆசிரமத்துக்கு வந்து என் அருகில் உட்கார்ந்தார். கனவானாக அவர் இருந்தும், எல்லோரையும்விட எவ்வளவோ மாறுபட்டவராக அவர் தோன்றினார். எங்களிடம் எதைப் பற்றியும் கேட்க வேண்டிய கேள்விகள் ஏதும் அவருக்கு இல்லை. எதையும் பற்றி கேள்விகள் கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற ஆவல் எங்களுக்குத்தான் இருந்தது.

பல ஆண்டுகளாக வேப்பிலையையும், யாராவது கொடுக்கும் பிசைந்த கோதுமை மாவையுமே உண்டு, அவர் தன் உடலைக் காப்பாற்றி வந்தார். அங்கு வந்ததும் அவர் ஓர் மூலையில் என் அருகில் உட்கார்ந்தார்.

அவர் சாந்தியை எவரும் கலைக்க வில்லை; எவராலும் கலைக்கவும் முடியாது. பிற எதைப் பற்றியும் தெரிந்து கொள்ளும் ஆவலை அவர் வென்று விட்டார். ஆனால், நாங்கள் அந்த ஆவலை வெல்ல வில்லை.

காந்தியடிகளால்கூட அந்த ஆவலை வெல்ல முடியவில்லை. எனவே ஒரு நாள் மாலையில், பிரார்த்தனை முடிந்தவுடன் காந்தியடிகள் பன்ஸாலியை அழைத்துக் கேள்விகள் கேட்டார். காந்தியடிகள் தாம் கேட்ட கேள்விகளை எழுதியும் கொடுத்தார். மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் பன்ஸாலி அன்று தான் வாயைத் திறந்து பேசினார்.

காந்தியடிகள்:— இந்த உணவு உங்களுக்கு ஒத்துக் கொள்கிறதா?

பன்ஸாலி:— ஆகா! மிகவும் நன்றாக ஒத்துக் கொள்கிறது.

கா:— வேப்பிலைகள் ஒரு வேளை உடம்புக்கு நல்லதாக இருக்கலாம்?

ப:- ஆமாம் எனக்குக் கீல்வாயு உபத்திரவம் இருப்பதால் மழை காலத்தில் இதை உட்கொள்ளுவதை விட்டுவிட வேண்டியிருக்கிறது.

கா: நாவுக்கு இந்த இலைகளின் சுவை உங்களுக்குக் கசப்பாக இருக்கிறதா?

ப:- (சிரித்துக் கொண்டே) இதில் பல தினுசுகள் இருக்கின்றன. சில இலைகள் கசப்பாகவும், சில இலைகள் அவ்வளவு கசப்பில்லாதா தாகவும் இருக்கிறன.

இவ்வுணவை இந்த நாக்கு சுவைத்துப் பழகிக் கொண்டு விட்டதால் அவற்றை உட்கொள்ளும் போது, நாவுக்குச் சுவைபிடித்துப் போகிறது. இங்கும் சுவை உணர்ச்சியுடன் போராட்டம் ஆரம்பிக்கிறது.

கா:- நீங்கள் எங்கு படுத்துக் கொள்கிறீர்கள்? உங்களுக்குப் படுக்கை ஏதும் இல்லையா?

ப:- எங்கெங்கே நான் இருக்க நேரிடுகிறதோ, அங்கங்கே படுத்துக் கொள்கிறேன். படுக்கைகூட உபயோகிப்பதுண்டு.

கா:- ஒரு படுக்கையும், விரிப்பும், போர்த்திக் கொள்ளத் துணியும் நாங்கள் கொடுத்தால், அதை உபயோகிக்க உங்களுக்கு ஆட்சேபனை இல்லையே?

ப:- இல்லை. ஆனால் பல தடவைகளில் நான் மரத்தடியிலும், வானத்தின்கீழ் வெறும் மண் தரையிலும், சுடுகாட்டிலும் கூடப் படுத்துக் கொண்டிருக்கிறேன்.

கா:- பாம்பு, புலி முதலிய ஜந்துக்களால் உங்களுக்கு ஏதேனும் கஷ்டம் நேரிட்டதுண்டா?

ப:- அம்மாதிரி எதுவும் ஏற்படவில்லை. ஒரு சமயம் என்னை ஒரு தேள் கொட்டிற்று. கட்டெறும்பு கடித்தால் ஏற்படும் வலியைக் காட்டிலும் அதிகமான வலி ஏற்படவில்லை. பல சமயங்களில் பாம்புகளும் என் வழியில் குறுக்கிட்டதுண்டு. ஒரு சமயம் நான் ஒரு புலியைக்கூடப் பார்த்தேன். எனக்கு அவற்றிடம் விரோதம் எதுவும் இல்லாததால், நான் அவைகளைக் கண்டு பயப்படுவதும் இல்லை.

கா:- நீங்கள் சுடுகாட்டில் படுத்துத் தூங்கிய காலத்தில் ஏதேனும் விசித்திர அனுபவங்கள் ஏற்பட்டதுண்டா?

ப:- இந்தக் கட்டை 'ஜீவயோனி'யால் ஆக்கப் பெற்ற தென்று நிச்சயமாகக் கூறுவேன். எனவே அவற்றில் நம்பிக்கை கொள்ளவேண்டுமென்ற அவசியமில்லை. அம்மாதிரியான உருவங்களை (பைசாசங்களை) நான் சந்தித்திருக்கிறேன். சில சமயங்களில் அவைகளைக் கண்டு நான் பயந்ததுண்டு. ஆனால் சீக்கிரத்திலேயே பழைய மன நிலையை அடைந்து விட்டேன்.

கா: கோதுமை மாவுக்காக பிச்சை கேட்க வேண்டிய அவசியம் உங்களுக்கு ஏற்பட்டதா?

ப:- இல்லை பாபு! அதை நான் கேட்கவேண்டி ஏற்படவே இல்லை.

கா:- நீங்கள் கேட்காமலேயே அது உங்களுக்குக் கிடைக்கிறதா?

ப:- இல்லை. பல தடவைகள் நான் பட்டினியாகவே இருக்க நேர்ந்தது. சிலர் மனமுவந்து எனக்கு உணவு அளிக்கிறார்கள். சிலர் என்னை வேஷதாரி என்றும், ஏமாற்றுபவன் என்றும் கருதுகிறார்கள். வேறு சிலர் என்னை ரகசியப் போலீஸைச் (ஸி. ஐ. டி.) சேர்ந்த ஆள் என்று நினைக்கின்றனர்.

கா:- ஒரு காலத்தில் நீங்கள் அக்கறை காட்டி வந்த உங்கள் உறவினர்களைப் பற்றியும், பழைய நண்பர்களைப் பற்றியும் எப்பொழுதாவது நினைப்பதுண்டா?

ப:- ஒருபொழுதும் நினைப்பதில்லை- நான் எல்லோரையும் மறந்து விட்டேன்.

கா:- கிராமவாசிகளின் வறுமையை நீங்கள் காணும் போது, உங்கள் மனத்தில் சங்கடம் ஏற்படுகிறதா?

ப:- அவற்றை நான் பார்க்கும்போதெல்லாம், நீங்கள் "எங் இந்திய" பத்திரிகையில் எழுதிய "காற்ருடி நடனம்" என்ற கட்டுரைகளை ஞாபகப்படுத்திக் கொள்கிறேன். அதில் நீங்கள் எழுதி யுள்ளதை யெல்லாம் நான் கண்ணுல் பார்க்கும் பொழுது எனக்குக் கிடைக்கும் ஒரு பிடி மாவைக்கூடச் சாப்பிட எனக்கு உரிமை யில்லை என்று எண்ணுகிறேன். எவரிடமுமிருந்தும் இதற்கு (ஒரு பிடி மாவு) அதிகமாக நான் திருடுவதில்லை யென்பதில் மட்டுத்தான் நான் திருப்தி யடைகிறேன். அதுவும் தவிர சுடுகாட்டில் மிருத்யு (யம) தரிசனம் காணுவதும் ஆறுதலளிக்கிறது.

கா:- உங்களைப் பற்றி நான் என் மனத்தில் ஏற்பட்டுள்ள ஆவலைப் பூர்த்தி செய்து வைக்க, நீங்கள் என்றைக்காவது என்னிடம் திரும்பமாட்டீர்களா?

ப: ஆம். வருவேன் என்று கூறவேண்டுமென்று தான் நான் விரும்புகிறேன். ஆனுல் எனக்குத் தெரியவில்லை, ஆண்டவன்தான் அறிவார். அது நடைபெறலாம். அது ஏற்படுவதற்கான நம்பிக்கை சிறிது இருக்கிறது.

கா:- நாள் பூராவும் உங்கள் மனத்தில் என்ன எண்ணங்கள் தோன்றுகின்றன?

ப:- நான் சில மந்திரங்களை ஜபிக்கிறேன். எனக்கு மனக் கவலையோ மனக் கஷ்டமோ கிடையாது.

கா:- அப்படியானுல், பயம் என்பதே உங்களை விட்டு விலகிவிட்டது என்று கூறிவிடலாமா?

ப:- ஆம் பாபு. நான் சாந்தி சாகரத்தில் நீந்திக் கொண்டிருக்கிறேன். இதெல்லாம் உங்களால்தான்

ஏற்பட்டது. தாங்கள்தான் இவற்றை எனக்கு உபதேசம் செய்தீர்கள். என் பழைய நாட்களில் பெரும் பகுதியை நான் மறந்துவிட்டேன். ஆனால் கீதையைப் பற்றியும், பக்த சிரோமணிகளின் யாத்திரை (சத்திய சோதனை)யைப் பற்றியும் தாங்கள் செய்த உபதேசங்களையும் நான் மறக்கவில்லை. நான் அகண்ட-சாந்தியைப் பெற்றுவிட்டேன். கனவுகள் என் உறக்கத்தைக் கெடுப்பதில்லை.

ஜனங்கள் பல தடவைகளில் கேலி செய்திருக்கிறார்கள்; கண்டபடி தூற்றியிருக்கிறார்கள். இவற்றிலெல்லாம் நான் மகிழ்ச்சியையே அடைகிறேன். என் உள்ளத்தில் ஏற்படும் சிறு ஆவல்களைக்கூட நசுக்கிவிட வேண்டுமென்று உண்மையாகவே விரும்புகிறேன். புகழ்ச்சி எனக்கு மகிழ்ச்சியைக் கொடுக்காதபோது, இகழ்ச்சி எனக்கு ஏன் வேதனையைக் கொடுக்கவேண்டும்? மானம், அவமானம், குளிர், வெப்பம், சுகம், துக்கம் ஆகியவற்றிலெல்லாம் நம்முடைய மனப்பான்மை, தராசு முனைபோல இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.* வறுமையை கண்டு எவரும் ஆனந்தப் படக் கூடாது. ஆனால் பாபு, ஒரு காலத்தில் நான் எவ்வளவு ஆடம்பரமாக வாழ்க்கை நடத்தி வந்தேன். அப்பொழுது இருந்த மனோ நிலை அது! இன்றோ முடிவற்ற சாந்தியை நான் அனுபவிக்கிறேன். (இதைக் கூறிவிட்டு பன்ஸாலி உரக்கச் சிரித்தார்)

கா;- நாள் பூராவும் எங்கு உட்கார்ந்திருக்கிறீர்கள்?

ப:- கீழேயுள்ள பட்டாசாலையில் சகோதரர்கள் வந்து போய்க் கொண்டே இருக்கிறார்கள். அதனால் எனக்

குத் தொந்தரவு ஏதும் இல்லே. யார் வருகிருர்களோ, போகிருர்களோ எனக்குத் தெரியாது.

கா:- அதுதான் உண்மையான வெற்றி.

இத்துடன் முதல் நாள் சம்பாஷணேகள் முடிந்தன. ஸ்ரீ பன்ஸாலியுடன் பேசவேண்டுமென்று காந்தியடிகளுக்கு எவ்வளவு ஆதங்கம் இருந்ததென்பதை ஏற்கெனவே கூறியிருக்கிறேன். இது காந்தியடிகள் ஒருவருக்கு மட்டும் ஏற்பட்டிருக்கவில்லே. இந்த ஆதங்கத்திற்கு அடிப்படையான காரணம், ஸ்ரீ பன்ஸாலியின் மன நிலேயைச் சரியாக உணர்ந்து, அவருடைய சிந்தனேகளில் ஏற்பட்டுள்ள குறைகளே அகற்றவேண்டுமென்ற ஆவல் தான். ஸ்ரீ பன்ஸாலியின் அசாதரண தியாகத்தை, செயல் ஆற்றப்படாமல் (நிஷ்கிரியதா) பயனற்றுப் போகும்படி விட்டு விடுவதா? வாழ்க்கையில் ஒவ்வொரு செயலேயும் தீரச் சிந்தித்து நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் காந்தியடிகளுக்கு, சிந்தனேயே செய்யாமல் வாளாவிருக்கும் ஸ்ரீ பன்ஸாலியின் மனப் போக்கு ஒரு பிரச்னேயாக இருந்தது. எனவே காந்தியடிகள் ஸ்ரீ பன்ஸாலியின் மன நிலேயை அளவில்லாத அன்புடனும் மரியாதையுடனும்,இரண்டு மூன்று நாட்கள் பிரார்த்தனேக்குப்பின், தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதன் மூலம் ஆராய்ச்சி செய்தார்

கா:- நீங்கள் தியானத்தில் இருக்கும் பொழுது,'ஓங்கார' மந்திரம் ஜபிக்கிறீர்களா?

ப:- ஆம் பாபுஜி.

கா:- அந்தச் சமயங்களில் உங்கள் மனத்தில் வேறு சிந்தனேகள் ஏற்படுகிறதா?

ப:- பல சமயங்களில் உங்களுடன் நான் செய்த சம்பாஷணைகள் மனத்தில் எழுகின்றன.

கா:- உங்களைச் சுற்றியிருக்கும் கஷ்டங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம், உங்கள் மனம் பெரிதும் அல்லல் படுவதாக என்னிடம் கூறினீர்களே, அப்படியானால் அந்தக் கஷ்டங்களைப் போக்க ஏதாவது செய்ய வேண்டுமென்று நீங்கள் விரும்ப வில்லையா?

ப:- இல்லை பாபுஜி.

கா:- அப்படியானால் உங்கள் மனம் அல்லல் படுவதாகக் கூறும் அர்த்தம் என்ன?

ப:- பிறர் கஷ்டப்படுவதைக் கண்டு நம் மனம் கஷ்டப் படலாம். ஆனால் என்னால் எதுவும் செய்ய முடியாதென்று வாளா யிருக்கிறேன்.

கா:- உங்களை ஒரு முள் தைத்தால், அதை நீங்கள் பிடுங்க மாட்டீர்களா?

ப:- பிடுங்கிவிடுவேன் பாபுஜி.

கா:- மற்றொருவருக்கு முள் தைத்தால், உங்களுக்கு ஏற்படும் வேதனையைப் போலத்தானே அவர்களுக்கும் இருக்கும்?

ப:- ஆம் பாபுஜி. அவர் உடலிலிருந்து அந்த முள்ளைப் பிடுங்குவேன்.

கா:- அதைப் போலவே, மற்றவர்களுக்கு ஏற்படும் பசியைத் தணிக்க, உங்களால் முடியுமானால், அதை நீங்கள் செய்வீர்களா? மாட்டீர்களா?

ப:- என்னால் சாத்தியமானால் அதைச் செய்வேன்.

கா:- ஒருவர் கஷ்டங்களால் பாதிக்கப்பட்டிருக்கிறார்; உங்களைத் தவிர அவர் அருகில் எவருமில்லை என்று

வைத்துக் கொள்ளுங்கள்; அப்பொழுது நீங்கள் என்ன செய்வீர்கள்?

ப;- அப்படியிருந்தால் நான் எதாவது செய்யமுயலு வேன். இல்லையானால் என்னால் என்ன செய்யமுடியும்? என்னால் அவருக்கு என் உயிரை அளிக்கமுடியுமா? என்னால் ஏதும் செய்யமுடிய வில்லை என்பதை ஒத்துக் கொள்வேன்.

கா:- இம்மாதிரி கூறிவிடுவதில், உங்களைப் போன்ற ஒருவர் பொறுப்பிலிருந்து விலகிக் கொள்ளமுடியாது.

[இதைக் கேட்டதும் ஸ்ரீ பன்ஸாலி புன் முறுவல் பூத்தார்]

கா:- உங்களைச் சுற்றிலும் மக்கள் படும் கஷ்டங்களைக் கண்டு, உங்கள் மனம் அல்லல் படுகிறது என்பதை நாம் இருவரும் ஒப்புக் கொண்டோம். நான் எழுதிய "காற்றடி நடனம்" என்ற கட்டுரைகள் உங்கள் மனத்தில் பெருங் கிளர்ச்சியை உண்டு பண்ணியதாக நீங்கள் கூறினீர்கள், இல்லையா?

ப:- ஆம் பாபுஜி. அந்தக் கிளர்ச்சி இன்னும் என் மனதில் இருந்து வருகிறது.

கா:- அப்படியானால், தன்னால் இயன்ற அளவுக்கு கஷ்டங்களை அகற்றப் பாடுபட்ட ஒருவர்தான் நீங்கள் கூறுவதைப் போல கூறலாம். ஒரு திக்கற்ற மனிதனுக்கு உதவி செய்வது எல்லோருக்கும் உதவி செய்வதை ஒக்கும் என்பதுதான் அதன் அர்த்தம். இந்த முறையிலேதான் உலகமே நடந்து வருகிறது. "பரஸ்பரம் சேவைக்காகத் தான் உலகமே சிருஷ்டிக்கப்பெற்றிருக்கிறது" என்பது கீதை வாக்கு.

ப:- அதெல்லாம் சரிதான். கடவுளைப் பிரார்த்தனை செய்வதும் மதம்தான்.

கா: ஈசுவர பாராயணம் என்பது தனியாக ஒரு பெட்டியில் பூட்டி வைக்கப்படவேண்டிய ஆபரணம் அன்று. அது நம் செயல்களில் காணுமாறு இருக்கவேண்டும். இதற்கு உங்களை இப்பொழுதே பதில் கேட்கமாட்டேன். நாம் இருவரும் பேசியதைப் பற்றி நீங்கள் சிந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள். இதைப் பற்றி நீங்கள் நிறையச் சிந்திக்க வேண்டுமென்று தான் நானும் விரும்புகிறேன். இவற்றை ஒரு சுமையைப் போல உங்கள் தலையில் சுமத்த விரும்ப வில்லை. இந்தக் கேள்விகள் உங்களுக்குப் பிடித்திருந்தால், ஒரு விஷயம் கூறுகிறேன். உங்களைப் பற்றியே நான் பெரும் அளவுக்குச் சிந்தித்து வருகிறேன் என்பது உங்களுக்குத் தெரியுமா?

[மறு நாள் ஸ்ரீ பன்ஸாலி காந்தியடிகளிடம் சென்று எதுவும் செய்யும் மனப்பான்மை யற்ற தம் மன நிலையை எடுத்துக் கூறினர். ஆனால் காந்தியடிகளோ அவரை அவ்வளவு சுலபமாக விட்டுவிடுபவராக இல்லை.]

கா:- சரி. உங்கள் மன நிலையைப் பற்றி நீங்கள் இப்பொழுது கூறினீர்கள். ஆனல் நானும் எனது பாட்டைப் பாடியாக வேண்டும்.

ப:- ஆஹா! அதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. என் மனப் போக்கைப் பற்றி உங்களிடம் தெரிவித்தேன்.

கா:- உங்கள் மனப்போக்கை நான் அறிவேன். உங்களைப் போலவே இருக்க எனக்கு ஏன் உற்சாகம்

ஏற்படவில்லை. உங்களைப் போல நானும் சுற்ற வேண்டுமென்று விரும்புகிறேன். இந்தச் சரீரத்துக்கு ஒத்துக் கொள்ளுமானுல் நானும் வேப்பிலையையும் மாவையும் சாப்பிட்டு வருவேன். உங்கள் வாழ்க்கையில் ஏதோ ஒரு புறம் சிந்தனைக் குறைவு (விசாரதோஷம்) இருப்பதாக நான் கருதுகிறேன். உங்கள்போக்கு (வழி) சரியான தென்ருல், சத்திய சோதனை செய்துவரும் நான் அதைப் பின்பற்றுவதுதான் தர்மமாகும். அதற்குமாருக உங்கள் செயல்களில் குறைவுகள் இருப்பதாக நான் கருதினுல், அதை எடுத்துக் கூறவேண்டியது என் தர்மம். இந்தக் குறைகளுக்கு, வேப்பிலையையும் மாவையும் உண்பதும், சுற்றி யலைவதும் காரணமல்ல வென்று நான் நினைக்கிறேன். நீங்கள் சில கடமைகளுடன் (யக்ஞம்) பிறந்திருக்கிறீர்கள். இந்தக் கடமைகள் உங்கள்பிறப்புடனே இணைக்கப் பெற்றிருக்கின்றன. ஆனுல் உங்களுடன் பிறந்த அவற்றை நீங்கள் மறுக்கிறீர்கள். கடவுள், மனிதரைச் சில கடமைகளுடனேயே (யக்ஞம்) சிருஷ்டித்து, அவற்றைச் செய்வதன் மூலம் அறிவைப் பெருக்கிக் கொள்ளும்படி கூறியிருக்கிருர்.

ப:- அந்தக் கடமை (யக்ஞம்) என்ன?

கா:- தன் கடமைகளைச் செய்யாமல் உண்பவன், உணவைத் திருடி சாப்பிட்டு வருவதாக ஆண்டவன் கூறியிருக்கிருர். பிச்சை வாங்கி உண்டு, உங்களைக் காப்பாற்றி வருவது நல்லதுதான். ஆனுல் அது யக்ஞ தர்மத்தைச் செய்வதன் மூலம் நடைபெற வேண்டும்.

ப:- நான் அதைக் கேள்விப்பட்டிருக்கிறேன். இன்று பூராவும் யக்ஞ கர்மம் செய்யாமலேயே நான் உண்டு

வருகிறேன் என்ற அதே எண்ணம் என் மனத்தை அலைத்தது. மாவு கூடச் சாப்பிட எனக்கு ஏதேனும் உரிமை இருக்கிறதா என்றே நான் நினைக்கிறேன்.

கா:- நீங்கள் அம்மாதிரி உணர்ந்தது நிரம்ப நல்லது. மதம் என்பதை அறிந்த உலகம் பூராவுமே அதே மாதிரிதான்—ஜைன சாதுக்களையும் சந்நியாசிகளையும் போலவே—நடந்து வருகிறது. இந்த இரு சாராரும் பிச்சை எடுத்தே உண்டு வருகின்றனர். மக்களுக்கு அவர்கள் தர்மோபதேசம் செய்வதால், அதுவே போதுமானதென்றும் கருதுகின்றனர். அம்மாதிரி அவர்கள் நினைத்து வருவது தவறு என்று நான் கருதுகிறேன்.

தர்ம உபதேசம் செய்யவேண்டியது அவசியம் தான். ஆனால் அத்துடன்கூட, அவர்கள் சரீர யக்ஞமும் (சேவையும்) செய்யவேண்டும். அம்மாதிரிச் சேவையை அவர்கள் செய்யும்போழுது, தங்கள் சேவைக்குப் பதிலாக எதுவும் கேட்காமல், மக்களின் தயையின் பேரில் வாழ்வதை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் அவர்கள், 'சுத்த பிராமண தர்மத்தைக் கடைப் பிடித்தவர்களாவார்கள். ஒவ்வொரு தியாகமும் ஓர் அணுப்பிரமாணமுள்ள போகமாகக் கருதப்பட்டுவரும் இந்த உலகிலே, இம்மாதிரியான புதிய விஷயம் அனுஷ்டிக்கப்பட்டு வருவதில்லை என்பதை, நான் உங்கள் மனத்தில் படும்படி திரும்பத் திரும்ப எடுத்துக்கூறவேண்டியிருக்கிறது.

உங்களுக்கு மனச்சோம்பல் இருப்பதனால், அதிலிருந்து உங்களைக் காப்பாற்ற விரும்புகிறேன். நான் உங்களைக் கேட்ட கேள்விகளைப் படியுங்கள். [காந்தியடிகள் தாம் கேள்வி கேட்டபோதே அவற்றை எழுதிக் கொண்டு வந்தார்] நான் எழுதி

யிருப்பவைகளில் உலக அனுபவம் பூராவும் அடங்கி யிருக்கிறது. என் வாழ்க்கை அனுபவமே அதற்குப் போதிய சான்று. ஆண்டவனால் தூண்டப்பட்டு பேரன்புடன் நீங்கள் என்னிடம் வந்திருக்கிறீர்கள். அந்த அன்புக்குப் பிரதியாக நான் உங்களுக்கு எதைக் கொடுக்கமுடியும்? உங்களுக்குக் கொடுக்க என்னிடம் நல்ல உணவு இல்லை. இருந்தாலும் அதைக் கொடுக்க நான் விரும்பவுமில்லை. அன்பினால் தூண்டப்பட்டே, இதையெல்லாம் உங்களுக்குக் கூறுகிறேன்.

ப:- நீங்கள் அதைப் பற்றி யோசிக்க வேண்டாம். சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லுங்கள்.

[இதன் பின்னர் ஒன்றிரண்டு நாட்கள்சாதாரணப் பேச்சு வார்த்தைகளிலேயே கழிந்தது. பின்னர், காந்தியடிகள் தன் காரியத்தை ஸ்ரீ பன்ஸாலியுடன் வேடிக்கையாகப் பேசி முடித்துக் கொள்ள முயன்றார்]

கா:- இன்று எவ்வளவு நூல் நூற்றீர்கள்?

ப:- ஒன்றுமே நூற்க வில்லை.

[எல்லோரும் உரக்கச் சிரித்தனர்]

கா:- நீங்கள் ஏதோ கொஞ்சம் நூற்க ஆரம்பித்ததாக கேள்விப்பட்டேனே, இல்லையா?

ப:- கொஞ்சம் நூற்கிறேன். அன்று நான் ஐம்பது கஜம்கூட நூற்கவில்லை.

கா:- அது போதுமா? நீங்கள் நூற்ற நூலினால் நெய்யப் பெற்ற லங்கோடியை நான் அணிய வேண்டும்.

[ஒரு லங்கோடிக்கு ஆறுயிரம் கஜம் நூல் போதுமானது. நீங்கள் இருபது நாள் நூற்றால் அது

லங்கோடிக்குப் போதுமானதாக இருக்கும் என்று நான் (மகாதேவ தேசாய்) கூறினேன்.]

கா:- ஓகோ, அப்படியானால் நீங்களே தயாரித்த லங்கோடியையே நான் அணிந்து கொள்ளப் போகிறேன். நீங்கள் எனக்கு இரண்டு லங்கோடிகளை அளித்தால், அது எனக்குப் பரம ஆனந்தத்தைக் கொடுக்கும் (எல்லோரும் உரக்கச் சிரித்தனர். பன்ஸாலியை நூற்கும்படி செய்ய, காந்தியடிகள் சிறந்த வழியைக் கண்டு பிடித்துவிட்டார் என்று கருதினர்.)

ப:- அதை நான் பெரும் பாக்கியமாகக் கருதுவேன். நான் நூற்கும் நூலால், உங்களுக்கு லங்கோடிகள் அளிக்கும் அந்தப் பாக்கியம் எனக்குக் கொடுத்து வைக்கவில்லை. இன்று அதைச் செய்ய எனக்கு மனமில்லையே.

[காந்தியடிகள் ஸ்ரீ பன்ஸாலியை நூற்கும்படி செய்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. மறுநாள் சம்பாஷணை ஆரம்பமாயிற்று. குழந்தை உள்ளத்துடன் ஸ்ரீ பன்ஸாலி காந்தியடிகளைப் பார்த்து பின் வருமாறு கூறினர்.]

ப:- உண்மையைக் கூறுமிடத்து உங்களுக்கு லங்கோடி தேவையே இல்லை. நான் நூல் நூற்று வர வேண்டுமென்றுதானே விரும்புகிறீர்கள்; இல்லையா?

கா:- நீங்கள் கேட்டது சரிதான். நீங்கள் வேலைசெய்வதாக இருந்தால், நீங்கள் ஏன் ஒரு லங்கோடிக்கு ஆகும்படியான நூல் நூற்கக் கூடாது?

ப:- நான் வேலை செய்ய வேண்டுமானால், எனக்கு வேறுவேலை ஏதும் நீங்கள் ஏன் கொடுக்கக்கூடாது?

உங்களுக்காக இந்தக் காரியத்தைச் செய்வதற்கு என்னிடம் போதிய பரிசுத்தம் இல்லை.

கா:- என் லங்கோடிக்காக நூல் நூற்றவர்கள் உங்களை விட அதிக பரிசுத்தமானவர்கள் இல்லையே?

ப:- இல்லை பாபுஜி! நான் அற்பனிலும் அற்பன். நான் அவர்களின் பாத தூளிக்குச் சமமானவன்.

[மறுநாள் ஆசார்யா காகா கலேல்கார் போன்ற பழைய நண்பர்கள்,பன்ஸாலியை வழிக்குக்கொண்டு வர முயன்றனர்.]

கலேல்கார்:- பாபுஜிக்குத் தாங்கள் இந்த அன்புக் காணிக்கையாவது அளிக்கக் கூடாதா? இம் மாதிரி காணிக்கையை எங்களில் எவரையாவது கேட்டிருந்தால், அதை நாங்கள் பெரும் பாக்கியமாகக் கருதியிருப்போம்.

(ஆனால் பன்ஸாலி, தான் பரிசுத்தமற்றவன் என்ற விடாப்பிடியான மனப்பான்மையிலேயே இருந்தார்.)

கலேல்கார்:- பாபுஜி எங்களில் எவரையாவது ஒரு குவளை தண்ணீர் கேட்பதாக வைத்துக் கொள்வோம். அந்தத் தண்ணீரை அவருக்குக் கொடுக்கக்கூடிய பரிசுத்தம் எங்களிடம் இல்லை என்று நாங்கள் கூறி விட்டால், பாபுஜியின் நிலைமை என்ன ஆகும்?

இந்த வாதம் ஸ்ரீ பன்ஸாலியின் மனத்தில் நன்கு பதிந்து விட்டது.

ஸ்ரீ பன்ஸாலி பதினோராயிரம் கஜம் நூல் நூற்றார். அவர் நூற்ற விவரத்தை உங்களுக்கு கூறவேண்டும். ஏனெனில் புனித உள்ளத்துடன் அவர் நூற்றது அவ்வளவு முக்கியமானது.

காலையில், குளித்த பின்னர் அவர் நூற்க உட்கார்ந் தார். அவர் சிந்தனை பூராவும் நூற்பதிலேயே இருந்தது. அவர் இருக்குமிடத்தைக் கடந்து சென்றவர்கள் எவரை யும் அவர் பார்க்கவேயில்லை.

பிரார்த்தனை செய்வது எவ்வளவு புனிதமோ, காந்தி யடிகளுக்கு நூற்பதும் அவருக்கு அவ்வளவு புனிதமாக இருந்தது. ஒவ்வொரு நாள் மாலையிலும் அவர் நூற்ற நூலைச் சிட்டம் கட்டுவார். அதை முறுக்குவதற்கு கால் கட்டை விரலை உபயோகிப்பது இங்கு வழக்கம். இந்தக் காரியத்தைச் செய்ய ஒப்படைக்கப்பட்டவர், தன் கட்டை விரலை உபயோகிக்க ஆரம்பித்தார். ஸ்ரீ பன்ஸாலி அவரைத் தடுத்து,"அது பாபுஜியின் நூல். அதை எப்படி அசுத்தப்படுத்தலாம். ஒவ்வொரு அங்குல நூலும் ஜபம் செய்துகொண்டு நூற்றதால் அது புனிதமானது" என்றார்.

அவர் நூல் நூற்று முடிந்த தினத்தன்று, அந் நூலை அவர் அழகான ஒரு சிப்பமாகக் கட்டி, அதில் குங்குமத் தைத் தடவி, காந்தியடிகளிடம் காணிக்கையாக அர்ப் பணம் செய்தார்.

# பிரிட்டனிலுள்ள நூலகங்கள்

டென்னிஸ் பார்டன்ஸ்

பிரிட்டிஷ் பிரதம மந்திரி ஹெரால்டு மாக்மில்லன், லண்டனிலுள்ள கிரேஸ் இன்னில், வழக்கறிஞர்களுக்குப் பயன்படக்கூடிய நூல் நிலையம் ஒன்றை அண்மையில் திறந்து வைத்தார். 1941 இல் எதிரிகள் வீசிய குண்டுகளால், இந்த நூலகக் கட்டிடம் அழிந்தது. இன்று அது மீண்டும் எழுந்து நிற்கிறது. இதைப் போல நாட்டின் பலவேறு பாகங்களில் நூலகங்கள் உண்டு. சில பொது நூல் நிலையங்கள்; சில சிறப்பு நூல் நிலையங்கள்.

பிரிட்டிஷ் மியூஸியத்தைச் சேர்ந்த நூல் நிலையம் உலகப் புகழ் பெற்றது. தற்கால நூல்களும் பத்திரிகைகளும் நிறைந்த தேசீய நூலகமும், தொல்பொருள் ஆராய்ச்சித் தகவல்களும் பொருள்களும், மனித வரலாற்றை கூறும் பல்வேறு சான்றுகளும் நிறைந்த கருவூலமும் இங்குண்டு. பல மொழிகளில் சுமார் 60 லட்சம் புத்தகங்களுள்ள இந்த நூலகத்தின் விசாலமான மண்டபத்தில்,வாசகசாலை இருக்கிறது. வட்டவடிவமான அந்த மண்டபத்தின் நடுவில் மிகப் பெரியதோர் நூல் பட்டியல் வைக்கப்பட்டிருக்கிறது. பட்டியலைப் புரட்டி, நூலின் பெயரையும் எண்ணிக்கையும் குறித்து, வாசகசாலைச் சிப்பந்தியிடம் கொடுத்தால் அவன் நூலைத்தேடித் தருவான். அபூர்வச் சுவடிகளை, தனியறைகளில் வைத்துக் காத்து வருகிறார்கள். ஆராய்ச்சி அல்லது தீவிரமாகப் பயில

விரும்புவோரையே இங்கு அனுமதிப்பதால், வாசகர் சீட்டுப் பெறுவதே சிறந்த உரிமையாகக் கருதப்படு கிறது.

பிரிட்டனில் பிரசுரமாகும் ஒவ்வொரு நூலின் பிரதி யையும் பிரிட்டிஷ் மியூஸியத்திலுள்ள தேசீய நூலகத் திற்கு அனுப்பவேண்டும் என்று சட்டமுண்டு. எடின்ப ரோவில் ஸ்காட்லாந்து தேசீய நூலகம் இருக்கிறது. இதில் ஏறக்குறைய 20 லட்சம் நூல்கள் உண்டு. வேல்ஸி லுள்ள தேசீய நூலகத்தில் சுமார் 12 லட்சம் புத்தகங்கள் உண்டு.

ஆக்ஸ்போர்டிலுள்ள பாட்லியன் நூலகமும் கேம்பி ரிட்ஜ் பல்கலைக் கழக நூலகமும் உலகப்புகழ் பெற்றவை. இவை ஒவ்வொன்றிலும் சுமார் 20 லட்சம் புத்தகங்கள் உண்டு.

நாட்டின் பல பாகங்களில் சுமார் 600 பொது நூல் நிலையங்கள் மக்களுக்குச் சேவை செய்து வருகின்றன. இவை அனைத்திலுமுள்ள புத்தகங்கள் சுமார் 630 லட்சம் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. பொதுமக்கள் இந்த நூல் நிலையங்களை சிறந்த முறையில் பயன்படுத்துகிறார் கள். அங்கத்தினர்கள் எடுத்துச் செல்லும் நூல்களின் எண்ணிக்கை ஆண்டுக்கு 40 கோடி என்று புள்ளித் தகவல் கூறுகிறது.

பொது நூல் நிலையங்களைத் தவிர சிறப்புத்துறை நூல் நிலையங்கள் பல பிரிட்டனில் உண்டு. இவற்றை அறிவுக் கருவூலங்கள் என்று குறிப்பிடலாம். லண்டனி லுள்ள ராயல் பூகோளச் சங்கத்தின் நூல் நிலையத்தில் நுழைந்தால் திபேத்திலுள்ள பிக்ஷுக்களின் வாழ்க்கையி லிருந்து தென் துருவமண்டலத்தில் எண்ணெய் தேடும் முயற்சி வரையில் உலகின் பல பிரதேசச் செய்திகளைத்

தெரிந்துகொள்ளமுடியும். இங்கு 100,000 புத்தகங்கள் உண்டு. ராயல் பிரிட்டிஷ் கட்டிடக்கலைஞர் கழகத்தில் அருமையானதோர் நூல் நிலையம் உண்டு. கட்டிடக்கலை சம்பந்தமான அரிய நூல்களையும் பிரதேசப் படங்களையும், கட்டிட வரை படங்களையும் இங்கு சேகரித்து வைத்திருக்கிறார்கள். உலகின் பல பாகங்களைச் சேர்ந்த கட்டிடக்கலை மாணவர்களும் நிபுணர்களும் இங்கு வருகிறார்கள்.

கியூ உபவனத்திலுள்ள தாவர இயல் நூல் நிலையம் தனிச் சிறப்புடையது. உலகின் பல பாகங்களிலுள்ள தாவரங்களைப் பற்றித் தகவல்களைக் கூறும் 500,000 நூல்களை, இங்கு அழகான முறையில் வகைப்படுத்தி வைத்திருக்கிறார்கள்.

முந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு, இரண்டாம் சார்லஸ் மன்னனால் நிறுவப்பட்ட ராயல் கழகத்தின் நூல் நிலையத்தில் அறிவியல் நூல்கள் 145,000 உண்டு.

உலக அரசியல், வைத்தியம், வரலாறு, கலை, மக்கள் வாழ்க்கை, கவிதை என ஒவ்வொன்றிலும் தனிக் கவனம் செலுத்தும் சிறப்பு நூல் நிலையங்கள் பல பிரிட்டனில் உண்டு. தேசீய மத்திய நூல் நிலையத்தில் இரண்டு கோடி நூல்கள் இருப்பதாக மதிப்பிடுகிறார்கள்.

ஆங்கில மக்கள் புத்தகப் பிரியர்கள். அவர்களுக்குப் பத்திரிகைகள் படிப்பதிலும் நவீனங்களைப் படிப்பதிலும் ஆர்வம் அதிகம். ஆயினும் இலக்கிய விஞ்ஞான நூல்களையும் அவர்கள் படிக்கிறார்கள். பிரிட்டனை கற்றோர் மலிந்த நாடு என்று கூறலாம்.

# கொய்த மலர்கள்

---

## பிரார்த்தனை

சுய நலத்துடன் கெஞ்சுவது தோத்திர மன்று; வாழ்வின் உண்மைகளை உயர்ந்த நிலையினின்று சிந்திப்பதே தோத்திரம். அது ஒரு கட்டற்ற ஆனந்த ஆன்மா தனக்குத்தானே பேசுதலாகும். அது தெய்வான்மா கடவுள் செயல்களின் நலத்தைப் புகழ்வதாகும். சுயநலத்துக்காக அத்தகைய தோத்திரத்தைப் பழகுதல் இழிவு, திருட்டு. கடவுளுடன் மனிதன் ஒன்று பட்டவுடன், பிச்சை கேட்கமாட்டான்; அப்போது, எல்லாச் செயல்களையும் அவன் கடவுள் வழிபாடாகக் காண்பான்.

—எமர்ஸன்

## தலைவன் யார்?

மக்களைக் கைதூக்கி விடு; ஆனால், அவர்கள், தங்களது ஆற்றலை இழந்துவிடும்படி செய்யாதே. மக்களுக்கு வழிகாட்டி அறிவூட்டு; ஆனால், ஒன்றைத் தாமாகத் துவக்கி நடத்தும் ஆற்றலும் கிரியா சக்தியும் குலையாதிருக்குமாறு பார்த்துக் கொள். மற்றவர்களிடமிருந்து பெறக்கூடியதை ஏற்றுக் கொள்; ஆனால் அதற்குப் பதிலாக, அவர்களது இயல்பின் முழுத் தெய்வீகத்தையும் அவர்களுக்கு அளித்துவிடு, இதைச் செய்ய வல்லோனே தலைவனும் குருவும் ஆவான். —யோகி அரவிந்தர்

## கல்விமான் யார்?

கல்விமான் எப்படியிருப்பான் என்ற லட்சணத்தைச் சொல்லும்படி பற்பல பிரமுகர்களை ஓர் ஆங்கிலப்

பத்திரிகை கேட்டிருந்தது. பலர் பலவித பதில்களைச் சொன்னார்கள். அவற்றில் பெர்னார்டு ஷா கூறிய பதில் இது; "மன்னியுங்கள். நான் இன்னும் அப்படிப்பட்ட ஆசாமியைச் சந்திக்கவில்லை."

ஆசைவலை

வண்ணாத்திப் புழு, தான் கட்டும் கூண்டுக்குள்ளேயே சிக்கிக் கொள்கிறது. அதே போல உலகப் பற்றுள்ள ஆத்மா தனது ஆசைகளாகிய வலையில் சிக்கிக் கொள்கிறது. ஆனால் அந்தப் புழு ஓர் அழகிய வண்ணாத்திப் பூச்சியாகப் பரிணமிக்கும் பொழுது கூட்டை உடைத்துக்கொண்டு வெளியே வந்து வெளிச்சத்தையும் காற்றையும் ஆனந்தமாய் அனுபவிக்கிறது. அதைப் போலவே, உலகப்பற்றில் வாழும் ஆத்மாவும், விவேகம், வைராக்கியம் என்ற இரண்டு சிறகுகளால், மாயையாகிய வலையைக் கிழித்துக் கொண்டு வெளிப்படக்கூடும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

மௌனம்

ஒரு நாளும் காட்டிக்கொடுக்காத நண்பன் மௌனம்.

—கன்பூஷியஸ்

மரண பயம்

மரணத்தைக் கண்டு அஞ்சுகிறவன் எதைக் கண்டு அஞ்சுகிறான்? உயிரும், உணர்ச்சியும் இல்லாமல் போய் விடுவதைக் கண்டா? அல்லது புதிய உயிரும் புதிய உணர்ச்சிகளும் வரும் என்ற பயமா? உணர்ச்சியற்றுப் போவதானால், எந்த விதமான துக்கமும் இல்லாதிருக்கலாமே?புதிய உயிரும்,புதிய உணர்ச்சிகளும் வருமாயின் நீ ஒரு புதியவனாவாய் அல்லவா? மரணம் ஏது?

—மார்க்கஸ் ஔரேலியஸ்

உண்மை

உண்மை பேசுவதிலே உள்ள ஓர் அழகு என்னவென்றால் என்ன சொன்னோம் என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டிய அவசிய மில்லாததுதான்.

—ஸெயின்ட் கிளநெட்

தெய்வ வாழ்வு

தேவர்களுடன் வாழ். ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் ஆண்டவனின் அம்சம் குடி கொண்டிருக்கிறது. அதுவே உள்ளிருந்து நமக்கு அறிவூட்டி, வழி காட்டி எப்பொழுதும் நம்மைக் காத்து வருகிறது. வாழ்வில், தான் பெற்றதைத் திருப்தியுடன் ஏற்றுக் கொண்டு எல்லாக் காரியங்களிலும் உள்ளத்திலுள்ள தெய்வம் காட்டும் வழியில் நடப்பதே, மனிதன் வானவர்களுடன் வாழ்வதாகும்.

மார்க்கஸ் ஒளரேலியஸ்

எந்த மதம் நல்லது?

சீக்கிய வீரர்களில் சிறந்த ஒருவரான ரஞ்சித் சிங்குக்கு, பக்கிரி அஜிஸ் உத்தீன் என்ற முஸ்லிம் அயல் நாட்டு மந்திரியாய் இருந்தார்.

அவரை ஒரு நாள் ரஞ்சித் சிங் இவ்வாறு கேட்டார். "எது உமக்கு அதிகமாகப் பிடிக்கிறது? இந்து மதமா? அல்லது இஸ்லாம் மதமா.?"

அஜீஸ் உத்தீன் அளித்த பதில், "ஆற்றிலே வெள்ளம் பொங்கி ஓடுகிறது. அந்த வெள்ளத்திலே அகப்பட்டுக் கொண்ட ஒருவனைப் போல நான் இருக்கிறேன். கரை தென்படாதா? என்று என் கண்கள் ஏங்கித் தேடுகின்றன. அது இந்தக் கரையாய் இருந்தால் என்ன? அந்தக் கரையாய் இருந்தால் என்ன? எனக்கொன்றும் அதிலே வித்தியாச மில்லை,"

### தனக்குத் தானே பொறுப்பாளி

ஒவ்வொரு மனிதனும், தனக்குத் தானே தன் முற் பிதாவும்,வாரிசும் ஆவான். ஏனெனில் தன் வருங்காலத் தைத் தானே உருப்படுத்துகிருன்;தன் இறந்த கால பல னைத்தானே அனுபவிக்கிருன்.

—எச். எப். எட்ஜ்

### படிப்பு

ஒரு மனிதனைப் படிக்க வைத்தால்,ஒரே ஒரு நபரைத் தான் படிக்க வைத்ததாகும். ஒரு பெண்ணைப் படிக்க வைத்தாலோ,ஒரு குடும்பத்தையே படிக்க வைத்ததற்குச் சமமாகும்.

—டாக்டர் சார்லஸ் மிக்லிவர்

### மன உறுதி

மன உறுதி இல்லாத மனிதன் நாணல் தட்டைக்குச் சமம். அது காற்றடிக்கும் பக்கமெல்லாம் வளையும்.

—மாகா

### கனவு

கனவு காண்பவன் வேறே என்ன செய்தாலும் சரி; ஒரே ஒரு காரியம் மட்டில் செய்வதே யில்லை; அதாவது, தான் கனவு காண்பதாகக் கனவு காண்பதில்லை.

—டீன் இஞ்சு

### மாணவர்களுக்கு

தெய்வ பக்தி, கல்வி, பகுத்தறிவு இம் மூன்றும் ஒரு மனிதனுக்கு அவசியம். முதலில் சொன்னதை உங்களுக் குக் கடவுள் தருவார்; இரண்டாவது சொன்னதை நான் தருவேன். மூன்ருவது சொன்னது உங்களிடம் இல்லா விட்டால், அதற்கு யார் என்ன செய்யமுடியும்?

—ஒரு பேராசிரியர்

### கவலை

பிறர் உங்களைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ என்று நீங்கள் பெரும்பாலும் கவலைப் படுகிறீர்கள். பிறர் உங்களைப் பற்றி நினைப்பதே யில்லை என்ற உண்மையை அறிந்தால், இப்படிக் கவலைப்படமாட்டீர்கள்.

—ஒலின் மில்லர்

### அழுகையும் சிரிப்பும்

நகைச் சுவையில் பல வகைகள் இருக்கின்றன. கேலி, அனுதாபம், கோமாளித்தனம் இப்படிப் பல விதம். இதனால்தான் சோக நாடக சிருஷ்டியைவிட, நகைச்சுவை நாடகம் சிருஷ்டி அதிகக் கஷ்டமாயிருக்கிறது. மக்கள் எத்தனையோ விதமாகச் சிரிக்கிறார்கள்; ஆனால், அழுவது மாத்திரம் ஒரே விதந்தான்.

—கிரௌசோ மார்க்ஸ்

### களிப்பு

ஒருவனுடைய உடைமைக்கும், வாழ்வுக்கும் இடையே பிடித்திருக்கும் துலாக் கோல்தான் அவனது களிப்பாகும்.

—ஓர் ஆங்கில ஆசிரியர்

### புத்திமதி

ஒரு பிரமுகர், தமது மகனுக்கு எழுதிய கடிதம்:

"உலகத்திலுள்ள மக்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். செயல் புரிபவர் ஒரு கோஷ்டி; அந்தக் கௌரவத்தை அடித்துக் கொண்டு போகிறவர் மற்றொரு கோஷ்டி. முதல் கோஷ்டியில் சேரவே நீ முயல வேண்டும். ஏனெனில் அதில்தான் போட்டி மிகவும் சொற்பம்."

தோழர்கள்

ஒரு பொருளைக் காதலிக்கும் இருவர் தோழர்களாக மாட்டார்கள். ஒரே பொருளிடம் பகைமை கொள்ளும் இருவரே எப்பொழுதும் தோழர்களாவார்கள்.

—ஹவார்டு ஸ்பிரீஸ்

கவியின் நன்றி

பிரான்ஸிஸ் தாம்ஸன் என்பவர் ஓர் சிறந்த ஆங்கில கவிஞர். தம் இளவயதில் அவர் ஒரு பித்தரைப்போல் திரிந்தார். வீதியில் கிடந்த குப்பைக் காகிதங்களில் எல்லாம் கவிகளும் கட்டுரைகளும் எழுதி பத்திரிகைகளுக்கு அனுப்பினர். ஒன்றும் வெளியாகவில்லை. அதனும் மனம் சோர்ந்த தாம்ஸன், தம் கந்தல் கடுதாசிக் கவிகளை "மெர்ரி இங்கிலாந்து" என்ற பத்திரிகைக்கு அனுப்பினர். உருக்கமாகக் கடிதம் எழுதினர். அதற்கும் பதில் இல்லை.

ஓர் ஆண்டு கழித்து, எங்கோ திரிகையில், "மெர்ரி இங்கிலாந்து" இதழ் ஒன்று கிடைத்தது. பிரித்தார். அவரது கவி ஒன்று அதில்வெளியாகியிருந்தது. ஆச்சரியமுற்றார். ஓடினர் அந்த பத்திரிகாலயத்துக்கு. அதன் ஆசிரியர் மேனல், கந்தைத் துணியுடுத்த தாம்ஸனைக் கண்டு வெறுக்கவில்லை. அவரது மேதையைப் போற்றினர்; ஆதரித்தார். பின்னல் தமது கவிதைத் திரட்டு ஒன்றைப் பிரசுரிக்கையில் தாம்ஸன் அதனை மேனலுக்கே அர்ப்பணம் செய்தார். அந்த உருக்கமான வார்த்தையைப் பாருங்கள்;

"மே மாத ரோஜா, தன்னை வளர்த்த தோட்டக்காரனுக்கே தன்னை அர்ப்பணம் செய்கிறது: தன்னகம் விளைந்த தங்கப் பூண்களைச் சுரங்கத் தலைவனுக்கே சுரங்கம் அர்ப்பணம் செய்கிறது; கிண்ணம் தன்னுள்

நிரம்பிய திராட்சை ரசத்தை, திராட்சைப் பழங்களுக்கே நிவேதிக்கிறது;பிடில் தன்னுள் மறைந்தெழும் பாட்டைப் பாடகனுக்கே நிவேதிக்கிறது. உதட்டில் மலரும் சிரிப்பு மனமகிழ்ச்சிக் குரியது; மனத்தெழும் அழுகை அதில் அழுந்திய துயருக்கே உரியது;என் கவி மலர்கள் உமக்கே உரியன. அன்புற்ற வள்ளலே! உமக்கே அவற்றை அர்ப்பணம் செய்கிறேன்."

மனம்

மனம், நீக்ரோவின் தலையிலுள்ள சுருட்டை மயிருக்குச் சமானம். அதை இழுத்துப் பிடித்திருக்கும் வரையில் நீளமாய் இருக்கும். ஆனால் பிடிப்பை விட்டதும், பழையபடி அது சுருண்டு விடுகிறது. அதுபோல, மனம் பலவந்தமாக அடக்கி நிறுத்தப்பட்டிருக்கும் வரையில், நன்றாய் வேலை செய்து நற்பயன் விளைவிக்கும். ஆனால் சற்று ஜாக்கிரதைக் குறைவு ஏற்படுமானால், உடனே அது சன்மார்க்கத்தை விட்டு விலகி விடும்.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

மனிதனும் இறைவனும்

மனிதன் யார்? போராட்டம், பிடிவாதம், பலாத்காரம் எதிர்பாராத வினை ஆகியவற்றின் மூலமாக இயற்கையை உடைமைப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, அவனிடமிருந்து தன்னுடைய உண்மையான சொரூபத்தை மறைத்துக் கொள்ளும் இறைவனே மனிதன். இறைவன் யார்? மானிட ஜீவனில் அமைந்துள்ள தனது தனித் தன்மையினின்று தனது விசுவ ரூபத்தையும் பர நிலையையும் மறைத்துக் கொள்ளும் மனிதனே இறைவன்.

—யோகி அரவிந்தர்

நாடகமே உலகம்

நீ இவ்வுலகத்தினின்று ஐந்து ஆண்டுகள் முன்னரே போனால் என்ன? பின்னர் போனால் என்ன? ஈசன் இட்ட கட்டளையில் எப்படி தவறு இருக்கும்? எந்தச் சக்தி உன்னை உண்டாக்கிற்றோ அந்தச் சக்தி உன்னைப் போ என்கிறது. இதில் என்ன குற்றம்?

நாடகத் தலைவன் நடிகனைப் போ என்பதில் என்ன பிழை? ஐயோ! நாடகம் முழுதும் ஆடவில்லையே என்பாய். நாடகம் முடியவில்லை என்பது உண்மை. முடியாத நாடகமே, நாடகத் தலைவன் திட்டமுடிவு. நாடகத்துக் காவது நாடகத்தின் முடிவுக்காவது நீ தலைவன் அல்லன். ஆகையால் கலங்காமல் உடலைவிட்டு நீங்குவாயாக! சாந்தக் கடவுள் உன்னை விடுவிப்பான்.

—மார்க்கஸ் ஔரேலியஸ்

தெய்வ தரிசனம்

சூரிய அஸ்தமனத்தின் அற்புதத்தையோ, சந்திரனின் அழகையோ நான் வியந்து போற்றுகையில், என் ஆத்மா குதூகலமுற்று, அனைத்தையும் படைத்த ஆண்டவனை வணங்குகிறது. இந்தச் சகல சிருஷ்டிகளிலும் அவனையும், அவனது கருணை வெள்ளத்தையும் காண நான் முயலுகிறேன். ஆனால் சூரிய அஸ்தமனங்களும் சூரிய உதயங்களும் அவனை நான் நினைக்க உதவாவிட்டால் அவையும்கூட வெறும் இடையூறுகளே யாகும். ஆத்மா உயர்ந்து எழுவதற்குத் தடையான எதுவும், வெறும் மயக்கமும் மாய வலையுமாகும். தேகமும்கூட அப்படித் தான் பல சமயம் மோட்ச மார்க்கத்தைத் தடுக்கிறது.

—காந்தியடிகள்

மரத்தின் கிளைபோல

ஒரு கிளையிலிருந்து ஒரு கிளை வெட்டப்பட்டால் அது மரத்தினின்றும் வேறுபடும். அவ்வாறே ஒருவன்

மற்ருெருவனிடம் வெறுப்புக் கொண்டு வேறுபட்டாலு ஞல், உலகத்தினின்றும் வேறுபட்டவன் ஆவான்.

மரத்தின் கிளை வேருெருவனுல் வெட்டப்படும். ஆனுல் உலகத்தினின்றும் வேறுபடும் மனிதன் தன்னைத் தானே அறியாமல் வெட்டிக் கொள்கிருன்.

கிளை வேறுபடுவதற்கும்,மனிதன் வேறுபடுவதற்கும் ஒரு வித்தியாசம் உண்டு.

வேறுபட்ட கிளை மறுபடியும் சேரமுடியாது. மனிதன் வேறுபட்டால் மறுபடியும் சேரமுடியும். இது மனிதனுக்குத் தெய்வம் கொடுத்திருக்கும் சக்தி.

ஆனுல் அடிக்கடி பிரிந்து வேறுபட்டோமானுல் மறுபடியும் கூடுவது கடினமாகும்.

தோட்டக்காரர்களைக் கேட்டால் சொல்லுவார்கள்; செடியில் பிறந்த கிளையின் குணம் வேறு, மரத்தோடு ஒட்டி வளர்ந்த கிளையின் குணம் வேறு.

உலகத்தாருடைய மனேபாவங்களும், என்னுடைய மனேபாவங்களும் வேறு பட்டிருந்தாலும், அவர்களுடன் சேர்ந்து வாழ்வது என்னுடைய கடமை.

—மார்க்கஸ் ஔரேலியஸ்

உண்மையும் பொய்யும்

உண்மை தன் காலை செருப்புக்குள் மாட்டுவதற்குள் பொய் உலகையெல்லாம் சுற்றித் திரும்பி வந்துவிடும்.

—மார்க் ட்வெயின்

உரிமை

நீர் சொல்லுவதை நான் அடியோடு வெறுக்கிறேன். ஆனுல், அதை நீர் சொல்ல உமக்குள்ள உரிமையை, என் உயிரையே வேண்டுமாயினும் கொடுத்து நான் காப்பாற்றுவேன்.

—வால்டேர்

திரை

இந்தத் துணியை என் முகத்துக் கெதிரே பிடித்துக் கொள்வேனுனல், நான் முன்போலவே உன் அருகில் இருந்தாலும் என்னை நீ காணமாட்டாய். அது போல, ஈசுவரன் மற்றெல்லாப் பொருள்களைக் காட்டிலும் உன்னிடம் நெருங்கியே இருக்கிருன்; என்ருலும் உனது அகங்காரமாகிய திரை காரணமாக, உன்னுல் அவனைக் காணமுடியவில்லை.

—ஸ்ரீ ராமகிருஷ்ணர்

பணம்

பணத்தை அழிப்பது சுலபம்; ஆனுல் சரியாக உபயோகிப்பதுதான் உலகிலேயே மிகக் கடினமான காரியம்.

—ஒரு நாவலாசிரியை

தன் கையே தனக்குதவி

அயலார் நமக்குப் புத்திசாலித்தனமாக வழிகாட்டிக் கொண்டு செல்ல, அதைப் பின்பற்றி நாம் நடந்து செல்வதைக் காட்டிலும், நாமே நம்முடைய சுய சக்தியைக் கொண்டு சுயபலத்தைக் கொண்டு முன்னுக்குவர கண்மூடித்தனமாகவோ, வீணுகவோ போராடுவதுதான் சிறந்தது.

—நெவின்ஸன்

சுகத்துக்கு வழி

சுகத்துக்கு வழி இதுவே. நடந்து போனதைப் பற்றித் துயரமும், வரப்போவதைப் பற்றிய கவலையும் விட்டு, நிகழும் காரியங்களில் மனம், திடபுத்தி, தயை இவற்றை அறிவுடன் செலுத்தி வாழ்வை நடத்து. உன் ஆத்மாவைப் பரிசுத்தமாகவும், மனம், கோணுமலும், எப்போது வேண்டினும் உடலிருந்து உயிர் வேறுபட்டு மாசற்றுச் செல்லத் தயாராக அமைத்துக்கொள். ஒன்றை

அடையப் போகிறேன் என்று எதிர் பாராமலும் ஒன்றிலி ருந்து தப்பிப் பிழைக்கவேண்டும் என்றும் எண்ணம் இல்லாமலும், இயற்கை வாழ்வு நடத்து. உன் பேச்சுக் களில்தைரியமும் சத்தியமும் பொருந்தியிருக்கவேண்டும். அப்போதுதான் சுகமாக இருப்பாய்! உன் மகிழ்ச்சிக்கும் எவனாலும் குறைவு வராது.

—மார்க்கஸ் ஔரேலியஸ்

வியாதி நாடகம்

தாமஸ் மான் என்ற ஜெர்மன் பேராசிரியர் எழுதிய நாடகம் ஒன்றை நடிக்க முன்வந்தார் மார்ட்டின் உஸ்ப் ஸன் என்ற நடிகர். அது சம்பந்தமாக அவருக்கும் அவ ருடைய தாய்க்கும் நடந்த ஒரு சம்பாஷணை:

தாய்: என்ன கதை அப்பா?

நடிகர்: பெரிய ஆஸ்பத்திரி. அதில் ஏராளமான நோயாளி கள். அவர்களுக்குள்ளே நடக்கும் சம்பவங்கள் தான் கதை.

தாய்: அவர்களுக்கு என்ன நோய்?

நடிகர்: சிலருக்கு க்ஷயரோகம்; சிலருக்கு மேகவியாதி; இப்படி போகிறது கதை.

தாய்: அப்படியா, நீ கொஞ்சம் ஜாக்கிரதையாக இரு அப்பா!

ஆண்டவன்

ஒரு சந்தையை அடையப் பல பாதைகள் உள்ளன; அதுபோல் ஓர் ஆண்டவனை அடையப் பல மதங்கள் உள்ளன.

—பெர்னார்டு ஷா

புத்த போதம்

படைப்பது எண்ணம், காப்பது அன்பு, அழிப்பது கோபம்.

விவேகாநந்தரின் தீரம்

ஒரு தடவை சுவாமி விவேகாநந்தர் ஐரோப்பாவில் ஓர் நகரத்தில் சென்று கொண்டிருந்தார். அவருடன் அந்த நாட்டைச் சேர்ந்த ஓர் ஆடவரும் ஒரு பெண்ணும் சென்று கொண்டிருந்தார்கள்.

வீதியில், மதம்பிடித்த ஒரு மாடு, கட்டுக்கு மீறி, எதிர்ப்பவர் அனைவரையும் குத்தி எறிவது போல சீறி வந்து கொண்டிருந்தது. மாடு தங்களை நோக்கி ஓடி வருவதைப் பார்த்த அப் பெண் பயந்து மயங்கி விழுந்துவிட்டாள். கூட வந்த ஆடவர் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள, அருகிலிருந்த ஒரு மரத்தின்மேல் ஏறிக்கொண்டார். விவேகாநந்தர் மாத்திரம் அதைச் சாவதானமாக எதிர்த்து நின்றார். வேகமாக வந்த மாடு சட்டென்று நின்றது; அதற்குமேல் திரும்பிச் சென்றது. பெண்ணின் மயக்கம் தெளிவிக்கப்பட்டது. மரத்தின் மீதிருந்த ஆடவரும் கீழே இறங்கி வந்தார்.

"மாடு தங்களைக் குத்தி எறிந்து விடுவதுபோல் வந்ததே; அச்சமயத்தில் தங்கள் மனத்தில் என்ன எண்ணம் தோன்றிக் கொண்டிருந்தது" என்று அந்த ஆடவரும் பெண்ணும் விவேகாநந்தரைக் கேட்டார்கள்.

"மாடு வந்த வேகத்தில் என்னைக் குத்தி எறிந்தால், என்னைப் போன்ற கனமான சரீரம் எவ்வளவு உயரத்துக்குப் போகும் என்று யோசனை செய்துகொண்டிருந்தேன்" என்றார் சுவாமி விவேகாநந்தர்.

# பிரிட்டிஷ் விவசாயக் கூட்டுறவு சங்கம்

## விவசாயக் கூட்டுறவு சங்கம்

கூட்டுமுயற்சியில் பலனுண்டு என்பதை உணர்ந்த விவசாயிகள், தங்களுடைய தேவைகளைக்கொள் முதல் செய்யவும், விளைபொருள்களை விற்கவும் கூட்டுறவு சங்கங்களை அமைத்துக்கொள்கிறார்கள். பல நாடுகளில், விவசாயத் துறையில், கூட்டுறவு இயக்கத்திற்கு முக்கிய இடமுண்டு. ஒவ்வொரு நாட்டிலும், தேவைக்கும் நிலைமைக்கும் ஏற்றபடி, விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் இயங்குகின்றன. பிரிட்டனில் கூட்டுறவு சங்கங்கள் பண்ணைத் தொழிலை மேற்கொள்ளவில்லை. விவசாயிகளுக்கு உதவும் முறையில் இயங்குகின்றன. நாளுக்கு நாள் இந்தப் பணி விரிவடைந்து வருகிறது. 1938 இல் இவை நடத்திய தொழிலின் மதிப்பு சுமார் 196 லட்சம் பவுன் (சுமார் 26 கோடி ரூபாய்) இப்போது. சுமார் 942 லட்சம் பவுன் (125.6 கோடி ரூபாய்). இங்கிலாந்தில் மூவருக்கு இருவர் வீதம் விவசாயிகள், கூட்டுறவு சங்கங்களில் அங்கம் வகிக்கிறார்கள். இங்கிலாந்தில் மட்டும் 208 விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

இங்கிலாந்தில் உற்பத்தியாகும் முட்டைகளில் மூன்றிலொரு பங்கு, கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனையாகின்றன. உற்பத்தியாகும் தான்யத்தில் ஐந்திலொரு பங்கும், கம்பளரோமத்தில் பத்திலொரு பங்கும், கூட்டுறவு சங்கங்கள் மூலம் விற்பனையாகின்றன. பொதுவாகப்

பார்த்தால், சென்ற இருபது ஆண்டுகளில் பிரிட்டிஷ் கூட்டுறவு சங்கங்கள் சிறப்பாக வளர்ச்சியுற்றுள. சென்ற போருக்கு முன்பு அவை நடத்திய தொழில் மதிப்பு, சராசரியாக ஆண்டுக்கு 130 லட்சம் பவுன் (17 கோடி ரூபாய்), இப்போது 740 லட்சம் பவுன்கள் (99 கோடி ரூபாய்).

அலுவல்கள்

பிரிட்டனில் 20 அங்கத்தினர்களேயுள்ள சிறிய சங்கங்களும், ஆயிரக்கணக்கான உறுப்பினர்களுள்ள பெரிய சங்கங்களும் உண்டு. சில சங்கங்கள், உறுப்பினர்களுக்கு வழங்க, எந்திரங்களேயும் பிற சாதனங்களேயும் தயாரிக்கும் நிலேயில் உள. உறுப்பினர்களுக்கு, தான்யமும், தீவனப் பொருள்களும் கொள்முதல் செய்யும் பணியுடன் சில சங்கங்களுடைய அலுவல் நின்றுவிடுகிறது.

பொதுவாக, விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், (1)விவசாயிகளுக்குத் தேவையான பொருள்களேக் கொள்முதல் செய்தல், (2) விளேபொருள்களே விற்பனே செய்தல் (3) விவசாயத்திற்கு உதவியான பணிகளேச் செய்தல் என மூன்று பொறுப்புக்களேயும் ஏற்று நடத்துகின்றன. சிறிய சங்கங்கள், தேவைக்கேற்றபடி ஏதாவது ஒரு பொறுப்பை ஏற்றுக் கொண்டு செயலாற்றுகின்றன. எல்லா சங்கங்களும் விவசாயிகளால் நிறுவப் பட்டவை, அவர்களால் நிர்வகிக்கப்படுபவை, அவர்களுடைய நன்மைக்காக செயலாற்றுபவை. அங்கத்தினர்களுடைய கூட்டு முயற்சியில் ஒவ்வொரு சங்கத்தின் வெற்றியும் தோல்வியும் இருக்கிறது.

கூட்டுறவு சங்கத்தில் சேர விரும்பும் விவசாயி, சாதாரணமாக, ஒரு பவுனே (ரூ. 1 3. 33.) பங்குத் தொகையாகச்

செலுத்தி, அங்கத்தினராகலாம். சங்கத்தில் தனக்கும் பொறுப்புண்டு என்பதை ஒவ்வொருவரும் உணரவேண்டும் என்பதற்காகவே,மூலதனமாக ஒன்று அல்லது ஐந்து பவுனைப் பங்குத் தொகையாகச் செலுத்தக் கோரப்படுகிறது. ஆனால் எவரும் 500 பவுன்களுக்கு (ரூ6666) அதிகமாகப் பங்குத்தொகை செலுத்தமுடியாது. அங்கத்தினர்கள் அனைவரும்-ஒரு பங்கு எடுத்துக்கொண்டவரும் பல பங்குகளை எடுத்துக் கொண்டவரும்- சம உரிமையுள்ளவர்கள்தான். அதிகமாக பங்குத் தொகை செலுத்தியதால்,நிர்வாகத் துறையிலோ,வேறு வகையிலோ விசேஷ உரிமைகளைக் கோரமுடியாது.

லண்டனிலுள்ள விவசாயக் கூட்டுறவு சங்கம், இங்கிலாந்திலுள்ள விவசாயக் கூட்டுறவு சங்கங்களின் மத்திய ஸ்தாபனமாக இயங்குகிறது. இதேபோல, வேல்ஸிலும், ஸ்காட்லாந்திலும்,மத்தியசங்கங்கள் செயலாற்றுகின்றன.

எரு, விதைத் தான்யம், தீவனம், உழவுக்கான எந்திர சாதனம், என, பலப்பல பொருள்களை, விவசாயிகளுக்கு வாங்கித் தருவதற்காக நிறுவப்பட்டவை, ஒரு சில கூட்டுறவு சங்கங்கள். இவை பொருள்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து அங்கத்தினர்களுக்கு வினியோகிக்கின்றன. இதனால், சில்லரைக் கடை விலையை விட மலிவாக ஒரு பொருளை வாங்கும் வசதி, அங்கத்தினர்களுக்குக் கிடைக்கிறது. மேலும், சங்கம், தனக்குக் கிடைக்கும் லாபத்தில் ஒரு பகுதியை, கொள்முதல் விகிதத்திற்கு ஏற்றபடி அங்கத்தினர்களுக்குப் பிரித்துக் கொடுத்து விடுகிறது. ஆகவே அங்கத்தினர்களுக்கு, இருவிதத்திலும் லாபம் கிடைக்கிறது.

தான்யம், கம்பள ரோமம், இறைச்சி, முட்டை, பால், புஷ்பம், பழங்கள் முதலியவற்றை விற்றுத் தரும்

பொறுப்பைச் சில சங்கங்கள் ஏற்றுக் கொண்டிருக்கின்றன. சமீப ஆண்டுகளில் தோன்றிய சில சங்கங்கள் விவசாயத்திற்குத் துணையான பல அலுவல்களைச் செய்து வருகின்றன. அங்கத்தினர்களுக்கு விவசாயக் கருவிகளை வாடகைக்கு கொடுத்தல், தீவனத்திற்காகப் புல்லைக் காய வைத்து கட்டிக்கொடுத்தல், கால் நடைகளுக்குச் செயற்கை கருத்தரிப்பு உதவி, பண்ணை இன்ஷ்யூரன்ஸ் எனப் பல துறைகளில் அவை பணியாற்றுகின்றன.

பிரிட்டிஷ் விவசாயத்தில் கொள்முதல்-விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் தான் அச்சாணி போன்றவை. சில சங்கங்கள் குறிப்பிட்ட பொருள்களை விற்பனை செய்வதில் கவனம் செலுத்தி வெற்றி பெற்றிருக்கின்றன. உதாரணமாக, கோழிகளையும் கோழி முட்டைகளையும் விற்பதில் 27 சங்கங்கள் தனிக்கவனம் செலுத்துகின்றன. இந்தச் சங்கங்களின் மொத்த அங்கத்தினர் எண்ணிக்கை சுமார் 33,000. இவை ஆண்டுக்கு 160 லட்சம் பவுனுக்கு (ரூபாய் 21கோடி) வியாபாரம் செய்கின்றன. பழங்களையும் காய்கறிகளையும் விற்பனை செய்ய 17 சங்கங்கள் உண்டு. இம் மாதிரிச் சங்கங்கள் தனித்திறமையுடன் செயலாற்றுகின்றன. ஸ்காட்லாந்தில் மேற்குக் கரைத் தீவுகளிலுள்ள ஒரு மீனவர் கூட்டுறவு சங்கம்,அங்கத்தினர்கள் பிடிக்கும் இறால்,நண்டு முதலியவற்றை விமானமூலம் கிளாஸ்கோவுக்கு அனுப்புவதுடன், விமானத்திலேற்றும் வரையில் அவற்றைச் சேமித்து வைக்கக் குட்டைகளை நிர்வகித்து வருகிறது. வடமேற்கு இங்கிலாந்திலுள்ள ஒரு கூட்டுறவு சங்கம்,ஓட்ஸ் அவல் தயாரிக்கும் தொழிற்சாலையை நடத்துகிறது.

லாங்கிளாஸன் டெய்ரி என்ற பால் விற்பனை கூட்டுறவு சங்கம் பால், பாலேடு,முதலியவற்றை விநியோகிப்

பதுடன், சொந்த லாரிகளில் லண்டனுக்கு எடுத்துச் சென்று விற்பனை செய்கிறது. ஈஸ்டர்ன் கௌன்டீஸ் பார்மர்ஸ் கோவாபரேடிவ் அஸோஸியேஷன், பெர்ஷோர் கோபரேடிவ் புரூட் மார்க்கெட் லிமிடெட், ஸ்டாபோர்டுஷயரிலுள்ள முட்டை விற்பனைச் சங்கம் முதலியவை பெரிய அளவில் வியாபாரம் செய்யும் கூட்டுறவு சங்கங்களாகும்.

## விவசாயக் கூட்டுறவு இயக்கம்

பிரிட்டனிலுள்ள விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், இடத்திற்கும், தேவைக்குமேற்றபடி, பல்வேறு அலுவல்களை மேற்கொண்டு செயலாற்றுகின்றன. உதாரணமாக வின்செஸ்டரிலுள்ள ஸதர்ன் கௌன்டீஸ் அக்ரிகல்சுரல் டிரேடிங் ஸொஸைடியைக் குறிப்பிடலாம். வின்செஸ்டர் ஒரு காலத்தில் இங்கிலாந்தின் தலைநகராகத் திகழ்ந்தது. இப்போது சிறந்ததோர் சந்தை நகரமாக விளங்குகிறது. தெற்கு இங்கிலாந்தின் விளைபொருள்கள் அனைத்தும் இந்தச் சந்தைக்குத்தான் வருகின்றன. ஸதர்ன் கௌன்டீஸ் ஸொஸைடியின் தலைமைக் காரியாலயம் இங்குதான் இருக்கிறது.

ஸதர்ன் கௌன்டீஸ் ஸொஸைடி, ஒரு பல துறை அலுவற் சங்கமாகும். மிகப் பெரியதோர் விளம்பரப் பிரிவை அது நடத்தி வருகிறது. அந்தப் பிரிவு விவசாயப் பொருட்காட்சி, புஷ்பம்-பழங்கள் காட்சிமுதலிய வற்றை நடத்துவதுடன், திரைப்படம், சொற்பொழிவு முதலிய நிகழ்ச்சிகள் மூலம் பிரசாரமும் செய்து வருகிறது. பத்திரிகைகளுக்குச் செய்திகளையும் விளம்பரங்களையும் வழங்குகிறது.

இந்தச் சங்கத்தின் அங்கத்தினர்கள், தங்களுடைய தேவைப் பொருள்களுக்காக, கடைத்தெருவுக்குச் செல்ல

வேண்டியதில்லை. மாட்டுத் தீவனம், தான்யம், தவசம், ரசாயன எரு, பூச்சிகொல்லிகள், களை அகற்றும் மருந்துகள், எண்ணெய், பிண்ணாக்கு, கயிறு, வேலிக்கம்பி, எனப் பல பொருள்களைச் சங்கப் பண்டக சாலையிலிருந்து வாங்க முடியும். சங்கத்தின் எந்திரப் பகுதியில் பலரக டிராக்டர்கள், எந்திரக் கலப்பைகள், புல்வெட்டிகள், அறுவடை எந்திரங்கள் முதலியவை உண்டு. பால்பண்ணைக்கு வேண்டிய எந்திர சாதனங்களையும், மின்சார சாதனங்களையும், இந்தச் சங்கம் விற்பனை செய்கிறது. இவற்றைப் பண்ணைகளில் நிறுவித்தரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது.

இந்தச் சங்கம் நீர்ப்பாசன வசதிக்காக, ஒரு பிரிவை நடத்துவது குறிப்பிடத்தக்கது. இந்தப் பிரிவு, நீர் ஊற்று இருக்குமிடத்தைத் தேடிப்பிடித்து குழாய்க்கிணறு வெட்டி நீர் இறைக்க எந்திரங்களையும் அமைத்துத் தருகிறது. நீரைத் தேக்கி வைக்கக்கூடிய இடங்களில் தொட்டிகளை அமைத்து வாய்க்கால்களை வெட்டித் தருகிறது.

இந்தச் சங்கம் 1907 இல் நிறுவப்பட்டது. இப்போது இதில் 8,500 அங்கத்தினர்கள் உண்டு. இது ஆண்டுக்கு 30 லட்சம் பவுனுக்கு (சுமார் நான்கு கோடி ரூபாய்) வியாபாரம் செய்கிறது. சங்கத்தில் 550 பேர் பணியாற்றுகிறார்கள். இவர்களுக்கு லாபத்தில் பங்கு கொடுப்பதுடன் 65 ஆம் ஆண்டில் பணியிலிருந்து விலகிய பிறகு, ஓய்வுகால வாழ்க்கைப் பணச் சலுகையும் தரப்பட்டுள்ளது.

தீவனம், தான்யம், எரு, விதைத்தான்யம், முதலியவற்றை விற்பனை செய்ய 13 கடைகளையும், 22 டெப்போக்களையும், எந்திர சாதன விற்பனைக்காக 10 கடைகளையும், பராமரிப்பு-மராமத்து பணிகளுக்காக 10 பட்டறைகளையும்

சங்கம் நிர்வகித்து வருகிறது. சாமான்களை எடுத்துச் செல்ல சங்கத்தில் 129 மோட்டார் வண்டிகள் உண்டு.

அங்கத்தினர்களுடைய உழைப்பும் கூட்டுறவும் இல்லாவிட்டால், இந்தச் சங்கம் செழித்திருக்காது. 8500 அங்கத்தினர்களும், சங்கத்தை, தம்தம் சொந்த ஸ்தாபனமாக எண்ணி பொறுப்புடன் நடந்து கொள்வதால்தான் முன்னேற்றம் காணமுடிகிறது.

கூட்டுறவு இயக்கம் பற்றி, விவசாயிகளுடைய கருத்தையும் இங்கு குறிப்பிடுவது அவசியம். கெண்டிலுள்ள ஸட்டன் வாலென்ஸில், திரு. ஜே. ஜி. டர்னர் கோழிப் பண்ணை நடத்தி வருகிறார். இவர் ஸதர்ன் கௌன்டீஸ் ஸொஸைடியிலும்-தாம் நிறுவிய-வேறு ஐந்து விவசாயக் கூட்டுறவு சங்கங்களிலும் அங்கம் வகிக்கிறார். இவற்றின் மூலமே தமக்கு வேண்டிய பொருள்களை வாங்கிக் கொள்ளுகிறார்; தம்மிடமுள்ள பொருள்களையும் விற்பனை செய்கிறார்.

அவர் பின்வருமாறு கூறினார்.:-

"நான் 1929 ஆம் ஆண்டிலிருந்து ஸ்டோன்கேட் பார்மர்ஸ் எக் அண்டு பௌல்ட்ரி ஸொஸைடியில் அங்கத்தினராக இருக்கிறேன். இந்தச் சங்கம் 1926 இல் பத்தே அங்கத்தினர்களுடன் நிறுவப்பட்டது. முதலாண்டிலேயே 10,000 பவுனுக்கு (ரூ. 1.33 லட்சம்) வியாபாரம் நடந்தது. இப்போது இந்தச் சங்கத்தில் சுமார் 8,000 அங்கத்தினர்கள் உண்டு. சென்ற ஆண்டில் 1,800,000 பவுனுக்கு (ரூ. 2.4 கோடி) வியாபாரம் நடந்தது. சங்கத்தின் மூலம் விற்பனை செய்ததில் உயர்ந்தபட்சமாக ஓராண்டில், எனக்கு 52 பவுன் லாபப்பிரிவு கிடைத்தது.

"என் பண்ணைக்கு வேண்டிய தீவனப் பொருள்களை கென்ட் அண்டு ஸஸெக்ஸ் பார்மர்ஸ் ஸொஸைடியின்

மூலம் கொள்முதல் செய்கிறேன். இந்தச் சங்கம் அவற்றை மொத்தமாகக் கொள்முதல் செய்து, பண்ணைகளில் கொண்டுவந்து சேர்த்து விடுகிறது. இதனால் எனக்கு இரு விதத்தில் வசதியுண்டு, விலையும் மலிவு, எனக்கு அலைச்சலும் இல்லை.

"என் பண்ணையில் கிடைக்கும் பழங்களையும், கம்பள ரோமத்தையும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமே விற்பனை செய்கிறேன். நான் அங்கத்தினராக உள்ள கென்ட் கம்பள ரோமம் உற்பத்தியாளர் சங்கம், கம்பள ரோமத்தை வகைப்படுத்தி, சிப்பம் கட்டி, லண்டனிலுள்ள சந்தைக்கு அனுப்புகிறது.

"நான் பல்வேறு கூட்டுறவு சங்கங்களில் சேருவதற்குக் காரணம் என்ன என்று நீங்கள் கேட்கலாம். கூட்டுறவு முறையினால் பலவகைகளில் லாபமுண்டு என்பதை நான் அனுபவத்தால் தெரிந்துகொண்டேன். விவசாயக் கூட்டுறவு சங்கங்களால், கிராம வாசிகளுக்கு பல நன்மைகளுண்டு. சாகுபடி செய்வதிலும் பண்டங்களை விற்பனை செய்வதிலும், தேவைப் பொருள்களை வாங்குவதிலும், பல தொல்லைகள் உண்டு. கூட்டுறவு இயக்கத்தால் அவற்றை விலக்கி லாபகரமாகவும், நாணயத்துடனும் வாழமுடியும். விவசாயிகள், கூட்டுறவு இயக்கத்திலுள்ள நன்மைகளை உணர்ந்துவிட்டால், எதிர்காலத்தில் விவசாயத்துறை சிறப்புற்று விளங்கும் என்பதில் ஐயமில்லை."

## கூட்டுறவு முறையில் விவசாயச் செலவு

பிரிட்டனில் விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், விவசாயிகளுடைய தேவைப் பொருள்களை வாங்கி வழங்கியும், விளை பொருள்களை விற்பனை செய்தும், எந்திரக் கலப்பை முதலிய சாதனங்களை பராமரிக்க உதவி செய்தும் பணியாற்றுகின்றன. பிரிட்டிஷ் விவசாயிகள், எந்திர

சாதனங்களை உபயோகித்து நவீன முறையில் பயிரிடுகிறார்கள். பண்ணைக்கு வேண்டிய எந்திர சாதனங்கள் அனைத்தையும் வாங்கிச் சேமித்தல் இயலாது. அது சிக்கனமுமல்ல. ஆகவே எந்திர சாதனங்களை வாடகைக்கு வழங்கவும், அவற்றைப் பராமரிக்கவும், பழுதுபார்க்கவும் விவசாயப் பணி கூட்டுறவுச் சங்கங்கள் தோன்றின. இவை வேறு பல வழிகளிலும் அங்கத்தினர்களுக்குத் தொண்டாற்றி வருகின்றன.

ஒரு விவசாயி தன்னுடைய பசுக்களைச் செயற்கை முறையில் சினைப்படுத்த விரும்புகிறான். வேறு ஒருவன் பசும்புல்லை உலர்த்தி சிப்பம் கட்டி வைக்க விரும்புகிறான். மற்றொருவன், வயலில் மண்டிக்கிடக்கும் களையை அகற்ற, எந்திர வசதியால் மருந்தைத் தெளிக்க விரும்புகிறான். இவர்கள் அனைவரும் விவசாயப் பணி கூட்டுறவு சங்கத்தின் உதவியை நாடுகிறார்கள். குறைந்த செலவில் பலனைப் பெறுகிறார்கள். ஒவ்வொரு விவசாயியும் ஆண்டில் சில தினங்களுக்கே பயன்படக்கூடிய எந்திரங்களை வாங்கிச் சேமிப்பது சிக்கனமுமல்ல, விவேகமுமல்ல. மேலும் தற்கால விவசாய எந்திரங்கள் விலை உயர்ந்தவை. அவற்றைக் கையாள தொழிற் திறன் வேண்டும். ஆகவே விவசாயிகள் கூட்டாகச் சேர்ந்து, எந்திர சாதனங்களை வாங்கி விவசாயப் பணி கூட்டுறவு சங்கத்திடம் ஒப்படைக்கிறார்கள். அந்தச் சங்கம், அவற்றைப் பராமரிப்பதுடன், அடக்கச் செலவைப் பெற்றுக்கொண்டு, அங்கத்தினர்கள் அனைவருக்கும் தொண்டாற்றுகிறது. இதனால் சிறு பண்ணைக்காரர்களுக்கு நல்ல லாபம் உண்டு. குறைந்த செலவில் நவீன எந்திர சாதனங்களின் சேவையைப் பெறுகிறார்கள்.

உதாரணமாக, புல் உலர்த்தும் பொறியை எடுத்துக் கொள்வோம். இது புல்லை வெட்டி, உலர்த்தி, காற்றழுத்

தத்தால் அமுக்கி சின்னஞ்சிறு சிப்பங்களாக்கித் தரு கிறது. இதன் விலையும் அதிகம். இதைக் கையாள தனித்திறனும் வேண்டும். ஆண்டில் சில மாதங்களில் தான் புல் செழிப்பாக இருக்கும். அப்போது புல்லை வெட்டி சேமித்துக் கொள்ளாவிட்டால் பனிக்காலத்தில் தீவனத் தட்டுப்பாடுப் ஏற்பட்டுவிடும். முறைபோட்டு வேலை செய்தால்தான், துரிதமாகச் செயலாற்றமுடியும், அனைவருக்கும் சேவை செய்ய முடியும். கூட்டுறவு மூலம்தான் இதைச் சாதிக்க முடிகிறது.

விவசாயப் பணி கூட்டுறவு சங்கங்கள் அனைத்துமே திறம்பட இயங்குவதாகக் கூறமுடியாது. ஒரு சில இடங் களில் தோல்வியுமுண்டு. அதுவும் புல் உலர்த்திக் கட்டு வதுபோன்ற பருவகாலப் பணியை மேற்கொண்ட சங்கங் களுக்குத்தான் பிரச்னைகள் அதிகம். ஆயினும் இம் மாதிரிச் சேவை அவசியம் என்பதை அனைவரும் ஏற் பார்கள்.

வட இங்கிலாந்திலுள்ள டீஸைட் விவசாயிகள் கூட் டுறவு சங்கம், புல் உலர்த்தும் பொறியை லாபகரமாக உபயோகித்து வருகிறது. அந்தப் பொறியில் தான்யத் தைக் காயவைக்கவும், தீவனமாகப் பயன்படும் தான்யத் தையும் பிறபொருள்களையும், அரைத்து, அமுக்கிக் கட்டி யாக்கவும் வழி செய்திருக்கிறது.

எந்திர சாதனங்களை வாடகைக்கு வழங்கும் சங்கங் கள் வேறு பல வழிகளிலும், அங்கத்தினர்களுக்கு உதவி செய்கின்றன. மருந்து தெளிக்கும் எந்திரம், அறுவடை எந்திரம், வைக்கோல் சிப்பம் கட்டும் எந்திரம் முதலிய வற்றை வாடகைக்கு விடும் ஒரு சங்கம்,களத்து மேஸ்திரி ஒருவரை நியமித்து, ஒவ்வொரு பண்ணையின் அன்றாட அலுவல்களைக் கவனித்து வருகிறது. இந்த மேஸ்திரி,

ஒவ்வொரு பண்ணைக்கும் வேண்டிய எந்திரங்களை அனுப்புவதுடன் அவற்றை இயக்க ஆட்களையும் அனுப்பி அன்றாட அலுவல்களைக் கவனிக்கிறார். பழுதுபட்ட எந்திரங்களை, சங்கத்தின் தொழிற்பட்டறைக்கு அனுப்பி சீர் செய்கிறார். இன்ன பண்ணைக்கு. இன்ன தேதியில் இன்ன எந்திரத்தை அனுப்ப வேண்டும் என்ற குறிப்பு அவரிடம் உண்டு.

அறுவடைகாலத்தில் போரடி எந்திரங்களை அனுப்பித்தரும் சங்கங்கள் சில உண்டு. லிங்கன்ஷயரில், நில மீட்சிப் பணிக்காக, சில சங்கங்களை நிறுவியிருக்கிறார்கள். கம்பர்லாந்திலுள்ள விவசாய எந்திரக் கூட்டுறவு சங்கம், எந்திர விற்பனைப் பகுதி ஒன்றை நிர்வகிப்பதுடன், பழுதுபட்ட எந்திரங்களைச் செப்பனிட 14 தொழிற்பட்டறைகளையும் நடத்தி வருகிறது.

குறிப்பிட்ட அலுவல்களை ஏற்றுக் கொண்டு தொண்டாற்றும் சிறிய சங்கங்களும் பிரிட்டனில் உண்டு. உதாரணமாக, வீல்டன் ஸீட்ஸ் லிமிடெட் என்ற சங்கத்தைக் கூறலாம். இந்தச் சங்கம் விதைப்புற்களைத் தயாரித்து விற்கிறது. அபரிஸ்ட்வித் என்ற இடத்திலுள்ள பண்ணையில் புற்தூருகளையும் விதைகளையும் தயாரித்து நாட்டின் பல பாகங்களிலுள்ள தன்னுடைய அங்கத்தினர்களுக்கு வழங்கிவருகிறது. இதனால் தீவனத்திற்கான தரமான புல்லைச் சாகுபடி செய்ய முடிகிறது.

கால்நடைகளைச் செயற்கை முறையில் சினைப்படுத்துவதை முக்கிய அலுவலாகக் கொண்ட சில சங்கங்கள் உண்டு. இந்தச் சங்கங்களில் ஒரு பசுவைச் சினைப்படுத்த 25 ஷில்லிங் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஓர்ஸ்டர்ஷயரிலுள்ள ஒரு சங்கத்தில் 4,500 அங்கத்தினர்கள்

உண்டு. இந்தச் சங்கம் 30 பொலிகாளைகளைப் பராமரிப்பதுடன் ஒரு சோதனைக் கூடத்தையும் நிர்வகித்து வருகிறது.

ஒரு சில சங்கங்கள் அடைகாக்கும் எந்திரப் பொறியை நிறுவி, அங்கத்தினர்களுக்குத் தொண்டு செய்கின்றன. அங்கத்தினர்கள் அனுப்பும் முட்டைகளைப் பொறியில் வைத்து, குஞ்சு பொரித்துத் தருகின்றன.

மாட்டுத் தொழுவம்,களஞ்சியம் முதலியவற்றை நிருமித்துத் தரும் கூட்டுறவு சங்கங்கள் சில உண்டு. பால் பண்ணை எந்திரங்களை அமைக்கவும் மின்சார வசதிகளை செய்து தரவும் சில சங்கங்கள் உண்டு. பண்ணையிலுள்ள எந்திரங்களையும், வாகனங்களையும் இன்ஷ்யூர் செய்து, பாதுகாப்புத் தரும் பொறுப்பை அக்ரிகல்சுரல் அன்ட் ஜனரல் கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸொஸைடி ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஸதாம்டனிலுள்ள ஓர் சங்கம் ஏலச் சந்தையை நடத்தி வருகிறது. இங்கு வாரத்தில் நான்கு நாட்கள் பல பொருள்களை ஏலம் கூறி விற்பனை செய்கிறார்கள். இதனால் அங்கத்தினர்கள் தங்களுடைய பொருள்களை நல்ல விலைக்கு விற்பனை செய்யமுடிகிறது.

### கூட்டுறவு இயக்கத்தின் வளர்ச்சி

பிரிட்டனில் விவசாயக் கூட்டுறவு இயக்கம் பிரமிக்கும் முறையில் வளர்ச்சியடைந்திருக்கிறது. 1901ஆம் ஆண்டில் தேசீய ரீதியில் விவசாய ஸ்தாபன சங்கம் நிறைவேறவில்லை. 1929 இல், சங்கம், கலைக்கப்பட்டது, அதன் பிறகு, இருபது ஆண்டுகளுக்கு விவசாயக் கூட்டுறவு சங்கங்களை இணைத்துப் பணியாற்றும் மத்திய சங்கம் ஏற்படவில்லை.

இரண்டாம் போர்க்காலத்திலும் பிறகும், நாட்டில் பல பாகங்களில் விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் தோன்றின. 1945 ஆம் ஆண்டில் அக்ரிகல்சுரல் கோவாபரேடிவ் அஸோஸியேஷன் என்ற பெயரில் மத்திய சங்கம் நிறுவப்பட்டது. இன்று இங்கிலாந்திலுள்ள 208 விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், மத்திய சங்கத்துடன் இணைந்து பணியாற்றுகின்றன. இவற்றின் மொத்தம் அங்கத்தினர் எண்ணிக்கை 165,000. இவை நடத்தும் மொத்த வாணிபம், ஆண்டுக்கு 740 லட்சம் பவுன். இந்தச் சங்கம் வியாபார நோக்கமில்லாமல் ஆலோசனை கூறும் ஸ்தாபனமாகவும்,கூட்டுறவு கல்வியை வளர்க்கும் சங்கமாகவும் செயலாற்றுகிறது. சர்க்காரும் மான்யமளித்து இதை ஆதரித்து வருகிறது

பிரிட்டிஷ் விவசாயக் கூட்டுறவு சங்கங்கள், பல்வேறு வழிகளில், விவசாயிகளுக்கு உதவி வருகின்றன. வெவ்வேறு தொழில்களைச் செய்தாலும், அனைத்தும், விவசாயிகளுக்காகப் பணியாற்றும் பொது நோக்கமுடையவை, விவசாயிகளால் நிறுவப்பட்டு, நிர்வகிக்கப்படுபவை. இடத்திற்கு ஏற்றபடி சங்கங்களின் தொழிலும், அங்கத்தினர்கள் எண்ணிக்கையும் அமைந்திருக்கிறது. சில சங்கங்கள் அங்கத்தினர்களுக்குத் தேவையான எரு, விதைத் தான்யம், தீவனப்பொருள், முதலியவற்றை வாங்கி வழங்குகின்றன. சில சங்கங்கள் அறுவடையாகும் தான்யத்தை சுத்தப்படுத்தவும், அவற்றை அரைத்துத் தரவும் நவீன எந்திரங்களை பராமரித்து வருகின்றன.

விற்பனைத் துறையில் மட்டும் கவனம் செலுத்தும் கூட்டுறவு சஙகங்களும் பிரிட்டனில் உண்டு. இவற்றில் சில, பொதுப்பணியுடன், முட்டை, இறைச்சி முதலியவற்றை விற்பனை செய்து தருவதிலும் அக்கறை

காட்டுகின்றன. கூட்டுறவு விற்பனை சங்கங்களும் விளை பொருள்களை விற்பனை செய்வதில் விவசாயிகளுக்கு உதவி வருகின்றன.

விவசாயப்பணி கூட்டுறவு சங்கங்கள் சென்ற சில ஆண்டுகளில் தோன்றி பிரபலமடைந்தவை. இவை நவீன எந்திரங்களைக் கொண்டு,களை எடுத்தல்,பூச்சிகளை அழித்தல், அறுவடை செய்தல், வைக்கோலைக் கட்டுதல் எனப் பல வழிகளில் விவசாயிகளுக்கு உதவி வருகின்றன. சில சங்கங்கள் தீவனப்புல்லை பதப்படுத்தி சிப்பங் கட்டித் தருகின்றன. சில சங்கங்கள், செயற்கை முறையில் கால் நடைகளை சினைப்படுத்தும் நிலையங்களை நிர்வகித்து வருகின்றன.

சமஷ்டி விற்பனை ஸ்தாபனம் இல்லாததும், விவசாயிகளுக்குக் கடன் வழங்கும் கூட்டுறவு சங்கம் இல்லாததும் பிரிட்டிஷ் கூட்டுறவு இயக்கத்திலுள்ள குறைகள். இயக்கத்தின் வளர்ச்சியைக் கவனித்தால் இவற்றைப் பெரிதாகக் கருதமுடியாது. சென்ற சில ஆண்டுகளில், பிரமிக்கும் முறையில் இயக்கம் வளர்ந்திருக்கிறது. புதிய சங்கங்களை நிறுவும் ஆர்வமும் அங்கங்கு உண்டு. இவற்றைக் கவனித்தால் கூட்டுறவு இயக்கத்தின் எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்றே தோன்றுகிறது.

# முன்னேற்றத்தின் ரகசியம்

ராஜாஜி

முன்னேன்றத்தின் ரகசியம் நல் வாழ்க்கை. நல் வாழ்க்கையின்றி மற்ற முயற்சிகளும் சாதனங்களும் பயனற்றுப்போகும். இதைப் பற்றிச் சந்தேகமே வேண்டாம். தவிர வேறு எந்த முறை இருந்தபோதிலும் நாட்டுமக்களின் பூரண நல் வாழ்க்கை ஒன்றே போதும். மிகப் பெரிய சிறப்பைத் தரும்.

நல்வாழ்க்கை தனிமக்களின் கையிலிருக்கிறது. அரசாங்கத்தின் கையில் இல்லை. அரசாங்கம் தனி மக்களின் முயற்சிக்கு உதவி செய்ய முடியுமே ஒழிய, சட்டங்களையும் அதிகாரத்தையும் கொண்டு மக்களைப் பலாத்காரமாக நல் வாழ்கையில் புகுத்தமுடியாது.

பயன்படும் வாழ்க்கைக்கு வேண்டியது ஊக்கம் கற்பனை, அறிவு, அன்பு. இந்த நான்கு குணங்களும், மக்கள் உள்ளத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தால், மக்களின் தனி வாழ்க்கையும் சுக வாழ்க்கையும் உன்னத நிலைமை அடையும்.

ஒவ்வொருவனும் தான் செய்யும் தொழிலில் ஊக்கம் கொண்டு உழைக்கவேண்டும். கற்பனை சக்தியை உபயோகித்து வேலை செய்யவேண்டும். மனிதனுக்கும் எந்திரத்துக்கும் முக்கியமான வித்தியாசம் மனிதனுடைய கற்பனை சக்தியே. சாமர்த்தியசாலிக்கும் மற்றவர்களுக்கும்

கற்பனு சக்தி படைத்திருப்பதும் இல்லாததுமே வித்தியாசம். கற்பனு சக்தியை ஆங்கிலத்தில் இமாஜினேஷன் என்பார்கள். இந்த இமாஜினேஷனே ஆக்க வினைகட்கு மூலம். கற்பனைச் சக்தியை அப்பியாசத்தின் வழி வளர்க்க முடியும். பயிற்சி இல்லாமற் போனுல் எதுவும் செத்துப் போகும்.

கற்பனை வேகம் பயன் தரக்கூடிய முறையில் சென்றல் மனிதனுக்கு ஊக்கம் தரும். பயனற்ற வழிகளிள் சென்ருல் கற்பனையானது வீண் மனோராஜ்யமாகும். கற்பனு சக்தியையும் சிந்தனையையும் பயனற்ற விஷயங்களிலும் முறைகளிலும் செலுத்தினுல்,சோம்பலும் தூக்கமும் வளரும்.

நமக்குள்ள மனோசக்தியைப் பயனற்ற துறைகளில் செலுத்தாமல் தடுத்துக் கொள்ளவேண்டும். சித்தத்தைப் பயன் தரும் வேறு துறைகளில் செலுத்துவதே இதற்கு வழி. ஏதேனும் நல்ல காரியங்களில் மனத்தைச் செலுத்தினுல், பயனற்ற சிந்தனைக்கு இடமிராது. அவ்வாறன்றி வீட்டைக் காலியாக வைத்துக்கொள்ளப் பார்ப்பது வீணுகும். சுத்த சமாதி நிலை சாதாரண ஜனங்களுக்கு எட்டாது. எந்த நிலையில் உள்ளவர்களுக்கும் உள்ளத்தைச் செலுத்தவேண்டிய நல்ல விஷயங்கள் ஏராளமாக இருக்கின்றன.

பேச்சே அன்றி பயனற்ற மனோவேகங்களை நீக்கி வேறு விஷயங்களில் மனத்தைச் செலுத்துவதும் அரிதல்ல; எளிதாகும். குறளாசிரியர் பயனில்லாத பேச்சைக் கண்டித்துத் தம்முடைய நூலில் ஒருதனி அதிகாரம் அமைத்தார் பேச்சே யன்றி பயனற்ற கற்பனைக்கும் பயனற்ற சிந்தனைக்கும் அற நூல்களில் அதிகாரங்கள் தந்து கண்டித்தல் தகும்.

மனம் என்பது கெட்ட குரங்கு. அது சும்மா இருக்காது. தூங்கும்போதுகூட அது சேஷ்டைகள் செய்து கொண்டே இருக்கப் பார்க்கும். மனோவேகங்கள் அவ்வளவும் ஒரேயடியாகத் தூக்கத்தில் அமர்வதில்லை. குறைவு பட்ட தூக்கத்தில் ஏற்படும் குரங்குச் சிந்தனைகளும் கற்பனைகளுமே கனவுகளாகின்றன. அவற்றைக் கொண்டு வருங்கால சுக துக்கங்களையாவது வேறு எந்த உண்மைகளையாவது காணப்பார்ப்பது சுத்த அறியாமை.

பயனற்ற சிந்தனைகள் விலக்குவதற்கு உபாயம் மேலே சொன்ன வழிஒன்றே. மூளைக்கு வேலைகொடுத்துக் கொண்டேயிருக்கவேண்டும். அதை சும்மாவிடக்கூடாது. சுத்த வாழ்க்கையின் ரகசியம் இதுவே.

மனோராஜ்யமாகாத கற்பனையாவது பொன் போன்ற செல்வம். குழந்தை நடக்கக் கற்பதைக் கவனித்தால் நடப்பதின் மூலம் பாகுபாட்டைக்காணலாம். முன் கால் எடுத்து வைத்ததும் உடல் முன்னால் சாய்கிறது. உடனே பின் அடி வைத்து விழாமல் தடுத்துக் கொள்வதே நிமிர்ந்து நின்று நடப்பதின் ரகசியம். மானிட முன்னேற்றமும் இவ்வாறே நடைபெறுகிறது. முன் சென்றுவிழப் போவதும், அதைப் பகுத்தறிவு கொண்டு தடுத்துக்கொள்வதுமே முன்னேற்றத்தின் ரகசியம்.

முன் எடுத்து வைக்கும் காலைப் போன்றது கற்பனை. எந்த ஆக்க வினையிலும் முதலில் கற்பனை வேகம் வேலை செய்ய வேண்டும். பிறகு பின் காலாகிய பகுத்தறிவு உதவிக்கு வந்து நிற்கவேண்டும். கற்பனையும் பகுத்தறிவும் இரு கால்களைப் போல் தொடர்ந்து சென்றால் முன்னேற்றம் உண்டாகும். கற்பனையின்றி வெறும் பகுத்தறிவு மட்டும் இருந்தால் போதாது. நின்ற இடத்திலேயே நிற்போம். முன்னேற்றம் வேண்டுமானால்

பிழை செய்யும் துணிவு வேண்டும். பிழையைக் கண்டு கொண்டு அதை அகற்றும் வழி தேடுவதற்காகப் பகுத்தறிவும் கூடவே இருக்கவேண்டும். இல்லாவிட்டால் கற்பனையானது நம்மைப் பள்ளத்தில் கொண்டு போய்த் தள்ளிவிடும்.

தான் கண்ட கற்பனையிலும் தான் செய்த சிந்தனையிலும் ஒவ்வொருவனுக்கும் ஓர் இயற்கைப் பற்று ஏற்படுகிறது. உண்மைக்கும் நன்மைக்கும் மாறுபட்டிருந்தாலும், எனது என்கிற அந்தப்பற்று, அவனைப் பிடித்துக் கொண்டு, பகுத்தறிவை மயக்குகிறது. இதுவே அறிந்தோரை ஏமாற்றும், பெரிய பகை. தான் பெற்ற குழந்தைகளிடம் தாய்க்குள்ள அன்பைபோல்தான்பெற்ற கற்பனை, தாம் செய்து தீர்த்தசோதனை. இவற்றில் அறிவுபடைத்தவர்களுக்குக்கூட ஒரு இயற்கைப்பசை ஏற்பட்டு வரம்பு மறைவும் பார்க்கிறது. பற்று அல்லது அபிமானம் இருப்பதாலேதான் குழந்தைகளுக்காகப் பெற்றோர்கள் பாடு படுவதும் தியாகம் செய்வதும். அதைப் போலவே ஒவ்வொருவனுக்கும் தான் கண்ட உண்மையில் பற்று ஏற்படுவதால் விடாமுயற்சியுடன் எதிர்ப்புகளினாலும் தடைகளினாலும் தளர்ச்சி உண்டாகாமல் மக்களின் முன்னேற்றத்துக்கு வேண்டிய இன்றியமையாத வினைகளில் மனிதன் ஈடுபடுகிறான். ஆனால் இந்த அபிமானம் பகுத்தறிவுக்கு அடங்கி நிற்கவேண்டும். என் மகன் என் மகனே; அவன் திருடனானாலும் மோசக்காரனானாலும் அவனை விடமாட்டேன்; நானும் அவனுடன் செல்வேன் என்பது குற்றமாகும். தான் வாதித்த அரசியல் கொள்கை, தான் போதித்த தருமம், அல்லது சம்பிரதாயம், தான் ஏற்படுத்திய பள்ளிக்கூடம் அல்லது போதனா முறை தான் ஆரம்பித்த ஒரு காரியம் இவ்விதமான

அகங்காரங்கள் எல்லாமே பகுத்தறிவை மீறினல் பெரும் குற்றமாகும்.

பற்றுக்கள் இல்லாமலிருக்கமுடியாது. பற்றுக்கள் இல்லாவிடில் குடும்பமில்லை, குழந்தையில்லை. அன்பு இல்லை. முயற்சி இல்லை. ஆனல் வரம்பு மீறக்கூடாது. அந்த வரம்பே பகுத்தறிவு. அது இருந்தால், அடக்கமும் அதன் பயனுக வெற்றியும் பெறுவோம்.

பூதப்பிரபஞ்சம் ஒரு பேரற்புத நியதிக்குட்பட்டு நிற்கிறது. கடவுளுக்கு பல பாஷைகளில் பல பெயரிட்டிருகிருர்கள். அனைத்தையும் கடந்து நிற்கும் பொருளுக்கு, அதாவது அறிவுக்கு அப்பால் நிற்கும் தத்துவத்துக்கு தமிழ்ப் பெரியோர் கடவுள் என்னும் பெயர் வைத்தார்கள். ஆண்பாலும் பெண்பாலும் அல்லாத இந்த ஈற்றுமொழியே அறிவைக் கடந்த பரம்பொருளைக் குறிக்கும்; பல சொற்களுள் பொருட் செறிவும் வடிவழகும், தெளிவும் சுருங்கிய உருவமும் கொண்ட சிறந்த மொழி. எல்லாப் பொருள்களிலும் ஊடுருவி நின்று வேலை செய்து உலகத்தைத் தாங்கி வரும் நியதித் தொகுதியில் ஒரு பகுதியைப் பௌதீக விஞ்ஞானப் புலவர்கள் சோதித்து விளக்கி வந்திருக்கிருர்கள். ஒரு நீர்த் துளி முதல் பூமண்டலத்தை போன்ற பெரும் கட்டிப் பொருள் வரையிலும் அதற்கும் அப்பாலும் உள்ள எல்லாக் கோளங்களும், அதனதன் உருவத்தோடு நின்று நிலைந்திருப்பதற்குக் காரணம் அணுக்கள் ஒன்ருேடொன்று ஒட்டி நிற்கும் இயல்பு. ஆங்கிலத்தில் இந்த சர்வ வியாபகமான பிண்ட சக்திக்குக் கோஹீஷன் என்று பெயரிட்டிருக்கிருர்கள். பிண்டசக்தி ஒழிந்து போனல் கல்லும் பொடியாய்ப் போகும். நாம் வசிக்கும் வீடுகள் தரையோடு தரையாகப் போகும். தனி உருவம் என்பதே இல்லாமல் எல்லாப் பொருளும் மலை

காடு எல்லாமே பொடியாகி ஒரு பெருந்தூசிக் கடலாக வடிந்துபோகும்.

பொருள்களின் வடிவ நிலேக்குக் காரணமான பிண்ட சக்தியைப் போலவே, சிதறிக் கிடக்கும் கோளங்கள் அனைத்தையும் தத்தம் மண்டல ஸ்தானங்களில் நிறுத்தி வரும் சர்வ வியாபகமான சக்தி ஒன்று உண்டு. இடை வெளிவிட்டு பிரிந்து நிற்கும் பொருள்களெல்லாம் ஒன்றை ஒன்று இழுத்து பிடித்து நிற்கின்றன. ஒருபுல் சுமையைக் கயிற்று வலேயில் போட்டு இறுக்க கட்டினுற் போல் உலகம் முழுதும் சிதறிப் போகாமல் ஒரு பெருஞ் சக்தியினுல் பிணைக்கப்பட்டு நிற்கிறது. எப்பொழுதும் சுழன்று சுழன்று அலேந்து கொண்டிருக்கும் எண்ணற்ற மண்டலங்கள் அனைத்தும், தத்தம் வட்டத்துக்குள் வட்ட மிட்டுக் கொண்டு. ஆனுல் வரம்பு மீருமல் ஒன்றை யொன்று இழுத்துப் பிடித்துக் கொண்டு நிலேத்து நிற் கின்றன. உலகம் யாவற்றிலும் வேலே செய்யும் இந்த பரஸ்பரக் கவர்ச்சி வேகத்துக்கு ஆங்கிலத்தில் க்ராவிடே ஷன் என்று பெயரிட்டிருக்கிருர்கள்.

நாம் கையாளும் பொருள்களுக்கும் பூமிக்கும் உள்ள கவர்ச்சியே பொருள்களின் கனமாக நாம் உணர்கிருேம். எல்லாப் பொருள்களும் தரையை நோக்கி விழப் பார்க்கின்றன அல்லவா? இந்தியாவில் பொருள் கள் தரையை நோக்கி வீழ்வதைப் போலவே அமெரிக்கா விலும் அதே சமயத்தில் பொருள்கள் அமெரிக்கா தரையை நோக்கி, இந்தியாவில் விழும் திசை நேர் எதிரிடைதிசையில் பாய்கின்றன. இந்தக் கண்டத்தில் பொருள்கள் விழுவதும் அமெரிக்காவில் விழுவதும் நேர் எதிரிடை கதி. காந்தத்தைநோக்கி இரும்புப் பொடி எல் லாத் திசையிலீருந்தும் செல்கின்ற விதமே பொருள்கள்

உருண்டை வடிவமான பூமியை நோக்கிச் செல்கின்றன. இந்தக் கவர்ச்சிச் சக்தியைத் தடுப்பதால் உண்டாகும் உணர்ச்சியே பொருள்களின் பாரம்.

ஆகவே எல்லாப் பொருள்களுக்குள்ளும் பரஸ்பரக் கவர்ச்சி சக்தி மறைந்து நிற்கிறது. இது பல தோற்றத்துடன் தன்னைக் காட்டிக் கொள்கிறது. பூதப்பொருள்களின் பரஸ்பரம் கவர்ச்சியைப் பராசக்தியின் ஒரே உருவமாகவே ஆராதிக்கலாம். எங்கும் பரவி நிற்கும் பௌதிக ஆகர்ஷணம் கடவுளின் ஒரு அர்ச்சாவதாரம் என்று வைதிக முறையில் சொல்லத்தகும்.

பௌதிகப் பொருள்களில் பரந்து வேலை செய்யும் இணைப்பைப் போலவே ஆன்மாக்கள் அனைத்துள்ளும் ஒரு பரஸ்பரக் கவர்ச்சி சக்தி நின்று வேலை செய்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு பூத அணுவும் மற்ற அணுக்களை இழுத்துக்கொண்டிருப்பது போலவே ஒவ்வொரு ஆன்மாவும் மற்ற ஆன்மக்களோடு பிணைக்கப் பட்டிருக்கிறது. உயிருள்ள உலகம் சிதறிப் போகாமல் இருப்பதற்கு இதுவே காரணம். அகில ஆன்மக் கவர்ச்சியும் 'க்ராவிடேஷன்' என்கிற பூதக் கவர்ச்சியைப் போலவே ஒரு பேருண்மை. அதது நிலைக்குத் தக்கவாறு தோற்றம் காட்டுகிறது. இந்தக் கவர்ச்சியே அன்பு.

குழந்தைக்கும் பெற்றோர்க்கும் உள்ள பற்றின் ரகசியத்தை நாம் முழுதும் கண்டோமா? இல்லை. மக்களிடை தோன்றும் நட்பின் ரகசியத்தைக் கண்டோமா? இல்லை. அகில ஆன்மக் கவர்ச்சியும் பராசக்தியும் ஓர் அர்ச்சாவதாரமாகும். உயிர்களில் காணும் கூட்டுறவும் பெண் ஆண் தொடர்பும் சமூகப் பற்றும் தேசப் பக்தியும் இன்னோரன்ன பல கவர்ச்சிகளும் இந்த அன்பு என்கிற

வேகத்தில் அடங்கும். க்ராவிடேஷனைப் போலவே அன்பு, நியதியும் விசுவப் பரப்பும் கொண்டது. உலகம் முழுவதும அன்பு என்கிற சக்தியால் கட்டுண்டு நிற்கிறது. ஒன்றிலிருந்து உண்டான பலவும் மறுபடியும் ஒன்ருகச் சேர இடைவிடாமல் முயலுகின்றன! அதுவே பல பற்றுக்களாகவும் கவர்ச்சிகளாகவும் தோற்றம் காட்டுகிறது. பௌதிகப் பொருள்களின்கனத்தைப் போலவே தடுக்கப்பட்ட அன்புச் சக்தியானது சுகம் துக்கம் துவேஷம் இவை போன்ற பல மனோ நிலைகளாகத் தோற்றம் கொள்ளுகிறது.

அன்பின் பெருமையையும் அதன் கடவுள் தன்மையையும் உணர்ந்து அதையும் அதன் வடிவில் ஈசனையும் ஆராதித்து நடந்து ஞானம், ஊக்கம், கற்பனை சக்தி, அறிவு, அன்பு இவற்றையெல்லாம் நாம் படைத்துப் பாடுபட்டாலும் ஆண்டவன் அருளும் வேண்டும். அதுவன்றி ஒரு பயனும் பெற மாட்டோம். நல் வழியில் நின்ருேமானால் ஈசனுடைய அருளும் பெருகும். வானம் பொழியும். மாரிபோல் தானுகப் பெய்யும்.

நல்வாழ்க்கைக்கு ஊக்கம் கற்பனு சக்தி, அறிவு அன்பு இவற்றை வளர்க்கவேண்டும் என்று சொன்னேனே யொழிய பொய், மோசம், திருட்டு இவை கூடாதென்று சொல்லவில்லை. உலகத்தில் சிலர் இருந்து கொண்டேயிருப்பார்கள். பொய்யரும் மோசக்காரரும் திருடரும் இல்லாமல் சமூகத்தை முற்றிலும் சுத்த சத்துவ சமூகமாகச் செய்ய ஒரு நாளும் முடியாது. ஆனால் பெரும்பாலோர், அறிவும் அன்பும் படைத்து ஊக்கத்தோடும் நல்ல கற்பனைச் சக்தியைச் செலுத்தியும் பாடுபட்டு வந்தால் சமூகம் மிக உன்னத சிறப்பு எய்தும். பொய்யும் திருட்டும் தாமாகவே வெட்கப்பட்டுமறைந்து கொள்ளும்.

நம்புங்கள்! நம்பி நிழலில் நில்லுங்கள். மனிதன் புத்தி எப்போதும் 'கடவுள் உண்டு கடவுள் எங்கே?' என்று சந்தேகத்தில் ஊசலாடிக் கொண்டிருக்கும். மரத் தடியில் நிழல்;அப்பால் உயிரைக் காயும் வெயில். நிழலில் நில்லுங்கள். வீணில் வெயிலில் அடிபட வேண்டாம். சின்ன விஷயங்களுக்கு அத்தாட்சி உண்டு. பிரமாணம் உண்டு. பேருண்மைகளுக்கு சாட்சியும் இல்லை. பிரமாண மும் கிடைக்காது. பொய்யென்று உறுதி கூறுவாரும் இல்லை. நம்புங்கள்; நிழலில் நில்லுங்கள். வீணுக வெயி லில் காய்ந்து சாகவேண்டாம்.

கடவுள் உண்டு.அன்பு உண்டு,உய்யும் வழி அவனை நோக்கிச் செல்லல். சுற்றுமுள்ளவர்கள் நலமே என் நலம் என்று எப்போதும் அன்பு செய்து, அன்பு எண்ணி அன்பு பேசி வாழ்க்கையை நடத்துவது தான் முன்னேற்றத்திற்கு வழி.

# எங்கள் கல்விச் செலவு

க. பிரேமா

மார்கழி மாத இறுதியில் எங்கள் தலைமை ஆசிரியர் கல்விப் பயணம் செல்லவேண்டும் என்று ஒரு சுற்றறிக்கை விடுத்தார். எங்கள் பள்ளி மாணவ மாணவியர்களும் ஆசிரியர்களும் அதில் பேருவகையுடன் கலந்து கொண்டோம். மூன்று நாள் உல்லாசப் பயணம் என்றதும் பல மாணவ மாணவியர் தயங்கினர். எங்கள் தலைமை ஆசிரியருடைய முன்னேற்பாட்டின்படி பஸ் ஒன்றை வாடகைக்கு எடுத்துக்கொண்டு பிரயாணத்தை நாங்கள் சனிக்கிழமை காலை தொடங்கினோம். எங்கள் பஸ் மூன்று நாட்களும் தஞ்சை மாவட்டத்தையே ஒரு பிரதட்சிணம் வந்தது. அவ்வமயம் கண்ட காட்சிகளையும் அனுபவத்தையும், இடங்களையும் பற்றிக் கூறுகிறேன்.

திருஞானசம்பந்தராலும் திருநாவுக்கரசராலும்உளங் கனிந்து பாடப்பட்ட நல்லநாயகி யம்மையும், பாசுபதேசுவரரும் எழுந்தருளியிருக்கும் திரு வேட்களத்தே தன்னிகரிலாது ஒளிரும் எங்கள் பள்ளியிலிருந்து பயணம் தொடங்கியது. பாசுபதேசுவரரைத் தொழுது அருள் வேண்டிப் பயணமானோம். எங்கள் பஸ் கூத்தப் பெருமான் நடமாடும் தில்லையின் வழியே சென்று தெற்கு நோக்கி தஞ்சை மாவட்டத்தை நோக்கிப் ‘பறந்தது’ என்று கூறும்படி விரைந்தது. காவிரியின் மகளாகிய கொள்ளிடத்தை தாண்டியபோது,காலைநேரம்.

தஞ்சை மாவட்டத்துள்ளே புகுந்து சென்றபொழுது சாலையின் இருபுறத்தேயும், கதிர்களின் கனம்தாங்காது நெற்பயிர்கள் தலை வணங்கி வயலிற் படிந்து கிடந்தன. அவற்றிலிருந்து கிளம்பிய புது நெல்லின் மனம் காலைப் பனிக்காற்றோடு கலந்து வந்து கொண்டிருந்தது. அறுவடை நடந்து கொண்டிருந்தது. அவற்றைக் கண்டபொழுது காவிரியின் வளமும் தஞ்சை மாவட்ட மக்களின் உழைப்பும் தெற்றெனப் புலனாயின. "சோணாடு சோறுடைத்து" என்று கூறியது எத்தனை உண்மை. பல நூறு ஆண்டுகள் அடிமை நாடாக இருந்து புத்துயிர் பெற்றபோதே இத்தனை வளமென்றால் பழங் காலத்தே சோழ மன்னர்கள் ஆண்டபோது எத்தனைப் பெருமையோடிருந்திருக்கும்? பொருட் செல்லவமும் அருட் செல்வமும், கலைச் செல்வமும் ஒன்றோடொன்றுபோட்டியிட்டுக் கொண்டு வாழ்வளித்த தமிழ் நாட்டைப் பார்க்கப் போகிறோம் என்பதை நினைத்த போது என்னுள்ளம் பேருவகை யடைந்தது.

சீர்காழியில் பேரூழிக் காலத்தே கடல்பொங்கி எழுந்த போது எல்லாம் வல்லான் அறுபத்து நான்கு கலைகளையும் ஆடையாக வுடுத்து, பிரணவத்தைத் தோணியாகக் கொண்டு அதன் மேல் இறைவியோடு அமர்ந்து வர, இக் கோயிலின் விமானம் கண்டு இத்தலமே நமக்கேற்றது எனத்தங்கினர் என்பது இடவரலாறு ஆகும். இக் கோயிலில் உள்ள இறைவன் பிரமபுரீசுவரர், அம்மை திருநிலை நாயகி. இங்கு இறைவனை குரு லிங்க சங்கமம் என்ற மூன்று நிலைகளிலும் வழி படலாம். இங்குள்ள குருமூர்த்தம் தோணியப்பர்; லிங்கமூர்த்தம் பிரமபுரீசுவரர், சங்கம மூர்த்தம் சட்டை நாதர். நாங்கள் மூன்று நிலைகளையும் தரிசித்து ஆளுடைய பிள்ளையின் அழகுக் காட்சியையும் கண்டோம். பிறகு வைத்தீஸ்வரன் கோயிலை

அடைந்தோம். இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் முத்துக்குமாரசுவாமி, அம்மன் தையல் நாயகி. அறுபத்து மூவருடைய வெண்கலச் சிலைகளும் அழகுற அமைக்கப் பட்டுள்ள காட்சி கலைகள் அறுபத்துநான்குமே தனித் தனி வடிவெடுத்து வந்தது போலக் காட்சி யளிப்பது மெய்மறக்கச் செய்யும் தோற்றமாகும். கோயில் வாரணம் கண்டு தொழுதோம்.

வைத்தீஸ்வரன் கோயிலுக்கு மேற்கில் உள்ள திருப் புன்கூர் மூவராலும் பாடப் பெற்றது. இங்கு சிவலோக நாதராகிய இறைவனும் சொக்கநாயகியம்மையும் எழுந் தருளியுள்ளனர். இத்தலம் புங்கமரத்தைத் தல விருட்ச மாகக் கொண்ட தாதலின் திருப்புன்கூர் எனப் பெயர் பெற்றது. இதற்குப் பக்கலிலுள்ள ஆதனூரில்தான் திருநாளைப் போவார் என்ற நந்தனர் அவதரித்து சிவ லோக நாதரை வழிபட்டது. நந்தனர் இங்கு வந்து கோயிலின் வாயிலகத்தே நின்று இறைவனைக் காண முயன்றபோது முன்னுலிருந்த நந்திதேவரின் உருவம் மறைத்து நின்றது. அதனைக் கண்ட நந்தனர் அவரை வேண்ட நந்தீதேவரும் சிறிது நகர்ந்து கொண்டார். இக் காட்சி மிக மிக அருமையாக ஒளிர்கிறது.

தருமபுரத்தில் ஆதீன கர்த்தாவைக் கண்டு அன்னர் தம் திருக்கரத்தாலேயே எங்களுக்களித்த "இந்துமத பால பாடம்" என்ற நூலைப் பெற்ருேம். தருமபுரத்தில் இறைவன் யாழ்மூரிநாதரையும் இறைவி மதுரமின்னம் மையையும் கண்டு களிகூர்ந்தோம்.

அடுத்து திருக்கடையூர். இது திருக் கடவூர் எனவும் கூறப்படும்; மார்க்கண்டேய நாயனர் பிறந்து முத்தி பெற்ற ஸ்தலம் இது.

அப்பர், சுந்தரர், ஆகிய மூவராலும் கல்லும் கனிய மனமுருகி பாடப்பெற்றஇறைவன் அமிழ்தகடேசுவரரை யும் இறைவி அபிராமியம்மையையும் யம தரும ராஜன் கால சம்காரமூர்த்தி ஆகிய மூர்த்திகளேயும் கண்டு வணங் கிஞேம்.

எங்கள் பஸ் மீண்டும் கிளம்பியது. கடற்கரை யோரமே அது சென்றபோது கடற்காற்று மிகவும் குளிர்ச்சியோடு "ஜிலுஜிலு" வென்று வீசி மனத்தில் "கிளுகிளுப்"பை மூட்டியது. வழிநெடுகிலும் பலப் பல காட்சிகளேக் கண்டு களித்துக் கொண்டே தரங்கம்பாடியை யடைந்தோம்.

இது ஒரு துறைமுகப்பட்டினம் இந் நகரைச் சுற்றி கோட்டைமதில் சூழ்ந்திருப்பது மிக அழகாக இருக் கின்றது. கி. பி. 1620 ஆம் ஆண்டு டேனிஷ்காரர்கள் கட்டிய ஒரு கோட்டையும் இங்குள்ளது. இன்று அது பழுதடைந்தநிலேயிலிருந்தபோதிலும் பார்க்கத் தகுந்தது கடற்கரையோரம் சென்று நாங்கள் அலேயின் வாயிலிலே நின்று கொண்டு அவற்றை அனுபவித்தோம். பின்னர் கரையேறி மீண்டும் பயணம் தொடங்கிஞேம். எங்கள் வண்டி காரைக்காலே நோக்கி ஓடிற்று.

காரைக்கால்:- காரைக்காலின் வழியாகச் சென்றபோது பலவிதமான காட்சிகளேக் கண்டு களித்துக் கொண்டே சென்ருேம். பிரஞ்சுக்காரர்களின் ஆட்சியின் அடிச் சுவடுகள் இன்னமும் அங்கு இருக்கின்றன; அவை அங்கு பல உருவங்களில் காட்சி தருகின்றன. அவற்றுள் ஒன்று மது. அதன் உருவத்தை பலப் பல சீசாக்களின் உருவங்களில், சுவர்களில் கண்டோம். வேறு ஒன்றும் இங்கு காணக் கூடிய முக்கிய பொருள்களோ இடமோ இல்லே யென்று கூறலாம். காரைக்காலம்மையாரின் திருக்கோயிலேக் கண்டவாறே திருநள்ளாறு சென்ருேம்.

இத்தலம் அரிசிலாற்றுக்கும் வாஞ்சநதிக்கும் இடையில் இருப்பதால் இப்பெயர் பெற்றது. இதற்குத் தர்பாரணீயம், நளேசுவரம் என்ற திருநாமங்களும் உண்டு. இறைவன் பெயர் நள்ளாரர். இறைவி போக மார்த்த பூண்முலையம்மை. இங்கு உள்ள சனிபகவான் சந்நிதி மிகவும் சிறப்புடையது. இங்குள்ள சனியீசுவரரை நளன் பூசித்தாக ஐதீகம். இங்குள்ள ஒரு மரகதலிங்கம் மிகவும் போற்றப்படுகிறது.

பிறகு நாகூரை அடைந்தோம். இது கிழக்குக் கடற்கரை யோரமுள்ள ஒரு சிறுநகரம். இங்கு வசிக்கும் மக்கள் பெரும்பாலும் முகமதியர். இது முகமதியர் புண்ணிய தலமாகும். ஆயினும் இந்துக்களும் இங்கு மிகுந்த ஒற்றுமையோடு வாழ்கின்றனர். இதனுள் முகமதியர் தங்கள் அல்லாவை அரூபமாகத தொழுகின்றனர். நாங்கள் இவ்வூரில் நுழைந்த சமயம் ஓர் ஊர் வலம் சென்று கொண்டிருந்தது. அது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. யானையும், அலங்கரிக்கப்பட்ட பலவித வாகனங்களும் சென்ற காட்சி அருமையானது. இங்குள்ள கடைத் தெருவில் பீங்கான் சாமான்களும், கண்ணாடி சாமான்களும் நிறைய விற்கப்படுகின்றன. இங்குள்ள தர்கா மிக அழகியது. இவற்றை யெல்லாம் கண்டு களித்த நாங்கள் நாகையை அடைந்தோம்.

"கத்துக் கடல் சூழ் நாகை" என்று காளமேகத்தால் புகழப்பட்ட இது ஒலிக்கும் கடல் அருகிலேயே உள்ளது. நாகப்பட்டினக் கடற்கரை மிகவும் அழகானது. இத்துறை முகத்தில் பாய் மரங்கள் பல நின்று கொண்டிருந்தன. இவை போக்கு வரவுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. நாங்கள் இங்கு தேநீர் அருந்தி சிறிது இளைப்பாறினோம். பிறகு தமிழர் தம் பெருங்கடவுளான வெற்றி

வேற்படைமுருகன் சிங்காரவேலனுய் வீற்றிருக்கும் சிக்கலே யடைந்தோம். இங்கு உள்ள இறைவன் நவநீதர். இறைவி வேல் நெடுங்கண்ணியம்மை.

கோயிலதிகாரி ஒருவர் எங்களுக் கென்று ஒரு தங்குமிடம் அமர்த்தியிருந்தார். அது மிக வசதியான இடம். அன்று இரவுகோயிலிலேயே எங்களுக் கென்று தனியாக சாப்பாடு தயாரிக்கப்பட்டிருந்தது. மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் கலந்து உட்கார்ந்து வெண்பொங்கல் புளியோதரைபோன்ற உணவு வகைகளை உட்கொண்டோம். நிலவு அருமையாகப் பொழிந்து கொண்டிருந்தது. நாங்கள் உணவை மிகவும் சுவைத்து உண்டு மகிழ்ந்தோம். அன்றிரவு சிக்கலில் தங்கி ஓய்வெடுத்துக் கொண்டோம். மறுநாள் எங்கள் பயணத்தைத் தொடர்ந்து கீழ்வேளூரை அடைந்தோம். இறைவன் கேடிலியப் பரையும் இறைவி வனமுலே நாயகியம்மையையும் வழிபட்டுக் களித்தோம். பின் திருவாரூரை யடைந்தோம்.

இது ஏழுவிடங்கத் தலங்களுள் ஒன்று.வீதி விடங்கப் பெருமான் இங்கு எழுந்தருளியுள்ளார். இத்தலம் மிகவும் பழையதாகும். இதற்கு கமலாலயபுரம் என்னும் பெயரும் உண்டு. இங்குள்ள திருக்குளம் மிகவும் பெரியது. அதன் நடுவில் கமலாலயம் சிறு தீவு போல் காட்சி தருவது மிகமிக இன்பம் தருவதாகும். திருக்கோயிலுள் ஐங்கலக் காசு விஞயகர், வன்மிகர்,தியாகேசர் விடங்கர், கமலாம்பிகை, நீலோத் பலாம்பிகை, சேரமான், சுந்தரர் ஆகியோருடைய மூர்த்திகள் மிக அழகாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இங்கு மனுச்சோழனுடைய தேர் சிறந்த சிற்பவேலேயோடு காட்சி தருகிறது. மனுச் சோழனுடைய சரிதம் இங்கு கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

இதற்கடுத்து நாங்கள் ராஜமன்னார்குடியை யடைந்தோம். இங்கு ராஜ கோபால சுவாமியைத் தரிசனம் செய்துகொண்டு மாரியம்மன் கோயிலுக்குச் சென்று, அன்னை பராசக்தியையும் வழிபட்டு மீட்டும் தஞ்சையை யடைந்தோம்.

தஞ்சையை யடைந்ததும் சரசுவதிமகால் எனப்படும் மன்னர் சரபோஜியின் நூல் நிலையத்தைச் சென்று பார்வையிட்டோம். இத்தகைய அறிவுக் கருவூலத்திற்கு அப் பெயர் பொருத்தமானதே என்பது அதைக் கண்ட பின்னரே தெரிந்தது. அதற்கடுத்து கலைக்கூடத்தையும் கண்டு களித்தோம். இங்கு தங்கள் நீண்ட நனயங்களின்மூலம் தங்கள் காலத்தியக் கதைகளை யெல்லாம் சொல்லி மகிழ வைக்கும் செந்தமிழ் நாட்டுச் சிற்பிகளின் கைவண்ணங்களை யெல்லாம் கண்டு உள்ளம் பெரிதும் களிகூர்ந்தது. சிலைகள் கருங் கற்களினாலும் வெண் கலத்தினாலும் வடிக்கப் பெற்றிருந்தன. அவை உயிரற்ற சிலைகளாகத் தோன்றவில்லை. உண்மையான உயிர் பெற்ற உருவங்களாகவே தோன்றின. இதைக் கண்டு களித்த பிறகு சிவகங்கை தோட்டத்திற்கு இளைப்பாறச் சென்றோம். இங்குள்ள தோட்டம் மிகுந்த வனப்புடையது. ஆனால் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றது. இங்கிருந்தே பெருவுடையார் கோயிலையும், பொற்கலசத்தையும் கண்டுகளித்தோம். இங்குள்ள கோட்டைச் சுவர்கள் பழுதடைந்த நிலையிலிருந்தபோதிலும் இன்னும் கம்பீரம் குன்றாது சோழர்களின் ஆட்சித் திறத்தைப் பறைசாற்றிக் கொண்டு நிற்கின்றது. அகழியும் அவ்வாறே.

நாங்கள் சென்ற சமயம் பொங்கற் திருவிழாவுக்கு முந்திய நாளாகையால் தஞ்சைக் கோட்டை முழுவதும் வேற் படை நிறுத்தியன போன்று நெடுந்தூரத்துக்கு

நெடுந்தூரம் கரும்புகளின் வகைகள் நிறுத்தப்பட்டிருந்த காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. வாழைப் பழமும் அவ்வாறே. இவற்றை யெல்லாம் கண்டுகளி கூர்ந்த நாங்கள் கல்லணையைக்கண்டு களிக்கச் சென் றோம்.

கல்லணை 2000 ஆண்டுகளுக்கு முன்பு பெருவளத் தான் எனப் பெயர் பெற்ற சோழன் கரிகாலனால் கட்டப் பெற்றது. இதனால் தஞ்சை மாவட்டம் முழுவதும் நீர் வளம் உடையதாயிற்று. இதிலிருந்து காவிரி, வெண் ணாறு, கல்லணைக் கால்வாய், புது ஆறு, கொள்ளிடம் ஆகியவை பிரிகின்றன. இவ்விடத்தின் அழகு பார்க்கப் பார்க்க தெவிட்டாதது. இங்கு கரிகாலன் யானைமீதமர்ந்து பண்டு தொட்டுப் பெருகும் தண்டமிழ்க் காவேரியைச் கட்டுவதே போல ஒருசிலை அமைத்திருப்பது உண்மைத் தோற்றம் போலப் புலப்படுகிறது. காவிரி அன்னையின் கரத்திலுள்ள குடத்திலிருந்து காவிரிப் பெருக் கெடுத்துப் பாய்வது போன்ற ஒரு சிலை இருக்கின்றது. உழவன் உழத்தி,வலைஞன்,வலைச்சி ஆகியோருடைய உருவச்சிலை களும் அழகுற அமைக்கப்பட்டுள்ளன. அகத்தியர் பெரு மான் தவம் செய்யும் கோலம் உண்மையாகவே சிற்பிக்கப் பட்டுள்ளது. காவிரி தோன்றியதற்குக் கூறப்படும் வர லாறும் இங்கு உருவாக்கப்பட்டுள்ளது.

பின் திருவையாறு சென்றோம். இது காவிரியின் கரையில் உள்ளது. இது ஐயாறு, பஞ்சநதம், பூலோக கைலாயம் எனவும் வழங்கப் பெறும். இங்கு ஐந்துநதிகள் கலப்பதாக ஐதீகம். அவையாவன சந்திர புஷ்கரணி, சூரிய புஷ்கரணி, கங்கை, பாலாறு, நந்தி தீர்த்தம். இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் ஐயாறப்பர். இறைவி அறம் வளர்த்த நாயகி. இங்கு சிவபெருமாள் ஆதிசைவர்

வேடம் தாங்கி தன்னையே பூசித்ததாகக் கூறப்படுகிறது. இவர் செம்பொற்சோதீசுவரர் என்று நூல்களால் அழைக்கப்படுகிறார்.

அடுத்து சுவாமிமலை. இது ஒரு உன்னத ஸ்தல மாகும். இக்கோயிலில் சந்நிதிக்கு செல்லஅறுபது படிகள் உள்ளன. ஒவ்வொரு படிக்கும் ஒவ்வொரு வருடத்தின் பெயர் இடப்பட்டுள்ளது. சுவாமி மலையில் உள்ள இறை வன் சுவாமி நாதர். கோயிலிலுள்ள மயில், மான், யானை இவற்றைக் கண்டு களித்தோம்.

கும்பகோணம், திருவிடமருதூர் முதலிய தலங்களை வழிபட்ட பின்பு நாங்கள் ஆடுதுறை விவசாயப் பண்ணை யைப் பார்வையிடச் சென்றோம்.

பின்னர், திருப்பனந்தாள், கங்கை கொண்ட சோழ புரம் முதலிய இடங்களைப் பார்த்துவிட்டு அண்ணாமலை நகரை அடைந்தோம்.

இவ்வின்பச் செலவால் யாம் பெற்ற பயன்கள் எழுதுந் தர மன்று. நாட்டைப் பற்றியும், பொருள்களைப் பற்றியும் புத்தக வாயிலாகப் படித்தும், பிறர் வாயிலாகக் கேட்டும் அறிவதைவிடக் கண்டு அறிவது ஆயிர மடங்கு மேலானது.

# திருச்சி மலைக்கோட்டை

ஏ. கே. செட்டியார்

திருச்சி மலைக்கோட்டை உலகப் பிரசித்தி பெற்றது. உறுதிக்குப் பேர்பெற்ற ஜிப்ரால்டர் பாறைக்கு இணையாக இதனை ஒப்பிடுகிறார் கில்பர்ட் ஸ்லேட்டர் என்ற ஆங்கில ஆசிரியர். உலகத்தின் பல நாடுகளி உள்ள பொருட்காட்சிச் சாலைகளில் இதன் சிறிய அள வுள்ள மாதிரியை (Model) காட்சிப் பொருள்களில் ஒன்றாக வைத்திருக்கிறார்கள். லண்டனில் மிகப் பிரபல மான வெஸ்ட் மினிஸ்டர் ஆபே என்ற இடத்திலுள்ள மேஜர் லாரன்ஸ் என்பவருடைய கல்லறையில் பொறிக் கப் பெற்றுள்ள உருவம் திருச்சி மலைக்கோட்டை.

மலைக்கோட்டையில் உள்ள பிள்ளையாரை, விபீஷண ஆழ்வார் வழி பட்டதாகக் கூறுவார்கள். அப்பரும், சம் பந்தரும் அகமகிழ்ந்து பாடிய பெருமையுடையது திருச்சி மலைக்கோட்டை.

தாயுமான சுவாமிகளும், அவருடைய குருநாதர் மௌன குரு சுவாமிகளும் தங்கி இன்பமடைந்த இடம் திருச்சி மலைக்கோட்டை.

ஆங்கிலேயர் ஆட்சி தென்னாட்டில் வேரூன்றிய காலத்தில், ராபர்ட் கிளைவ் என்பவரின் ராணுவத் தள மாக இருந்து சரித்திரப் புகழ் பெற்றது திருச்சி மலைக் கோட்டை.

பல்லவ, சோழ, நாயக்க மன்னர்கள் பக்தியுடன் வழி பட்டு, பல திருப்பணிகளைச் செய்து மகிழ்ந்த பெருமை உடையது திருச்சி மலைக் கோட்டை.

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் போன்ற பெரியவர்களும், அறிஞர் பெருமக்களும், சித்தாந்தச் செல்வர்களும் எண்ணற்ற சமயச் சொற்பெருக்குகளை நிகழ்த்திய இடம் திருச்சி மலைக்கோட்டை.

இவையெல்லாம் ஆச்சரியமல்ல! தமிழ் நாட்டில் பிறந்தும், எத்தனையோ முறை திருச்சியில் மலைக் கோட்டை வழியாகச் சென்றும், மலைக்கோட்டையின் மீது நான் இது வரை ஏருமல் இருந்ததுதான் ஆச்சரியம்! தமிழ் நாட்டில் என்னைப் போன்றவர்கள் எத்தனை பேர்களோ?

மலைக் கோட்டையைப் பார்க்கும் பொழுது, நமக்கு ஒரு மலைப்பு உண்டாகிறது. நாம் மனத்தாலும் நினைத் தற்கு அரிய, அதி அற்புதமான கோயில் ஒன்றை மலை யின்மீது அமைத்துள்ளார்கள் நமது முன்னோர்கள். அவர்கள் உயரிய நோக்கமுடையவர்கள். வாழ்க்கையில் உயர்ந்தவர்கள். எல்லோரும் உயரவேண்டும் என்று எண்ணியவர்கள். அவர்களின் வழித்தோன்றல்களா நாம்?

* * * *

சில தினங்களுக்குமுன் திருப்பராய்த் துறை ஆலயத் தில் ஆண்டவனை வழிபட்டு நின்றேன். அப்பொழுது அங்கு வந்த பரமசிவம், "உச்சிப் பிள்ளையார் கோயி லுக்கு நீங்கள் சென்றிருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

ஏதோ குற்றம் செய்தவனைப் போல, "இன்னும் செல்லவில்லை. செல்லவேண்டுமென்ற ஆசை உண்டு. ஆனால் மலை உயரமாகவும், படிகள் செங்குத்தாகவும்

இருக்கும் என்ற பயத்தால் இதுவரை செல்லவில்லை'' என்றேன்.

"நீங்கள் நினைப்பதைப் போல மலை அவ்வளவு உயரமில்லை. மொத்த உயரமே 273 அடிதான். உச்சியை அடைய 420 படிக்கட்டுகள் உள்ளன. நீங்கள் அவசியம் பார்க்கவேண்டும். நானே உங்களை அழைத்துச் செல்கிறேன்'' என்றார் அவர்.

பரமசிவமே வழிகாட்டுவதென்றால் இதைவிடப் பாக்கியம் வேறு என்ன வேண்டும்? உடனே சம்மதித்தேன். மலைக்கோட்டை செல்ல பரமசிவம் நாள் குறிப்பிடவில்லை. நான் குறிப்பிடும் நாளிலேயே என்னை அழைத்துச் செல்வதாகக் கூறினார்.

குறிப்பிட்ட நாளில், மாலை ஐந்தரை மணிக்கு மலைக் கோட்டை வாயிலை அடைந்தேன். வாயிலில் இரு பெரிய கல் யானைகள் காட்சியளித்தன. உள்ளே நுழைந்த பொழுது, என்னை யறியாமலேயே ஓர் உணர்ச்சி உண்டாயிற்று. இவ்வளவு காலமாக இதைப் பார்க்கவில்லையே என்ற வருத்தம்; இப்பொழுதாவது பார்க்கப் போகிறோமே என்ற மகிழ்ச்சி.

வழியில் இருபுறமும் கடைகள் இருந்தன. அவற்றைக் கண்டதும் எனக்கு வெறுப்பு உண்டாயிற்று. கோயிலுக்குள் கடைகள் இருப்பதால், கோயிலுக்கு வருமானம் வரலாம். ஆனால், அக்கடைகள் கோயிலின் அழகையும், சூழ்நிலையையும் அடியோடு குலைத்து விடுகின்றன.

ஜனக் கூட்டம் அதிகமாக இருந்தது. அடிவாரத்திலுள்ள பிள்ளையாருக்கு எவ்வளவு ஆராதனைகள்! எவ்வளவு மரியாதைகள்; அடிவாரத்திலுள்ள பிள்ளையாருக்கே இவ்வளவு மகிமை இருந்தால், உச்சிப் பிள்ளை

யாருக்கு எவ்வளவு மகிமை இருக்கவேண்டும் என்று யோசித்தேன்.

கோயில் சேவகர் ஒருவர் என்னைப் பார்த்து, "பரம சிவம் உங்களை அழைத்து வரச் சொன்னார்கள்" என்றார். அவர் பின்னே நடந்து, பல படிகள் ஏறி, ஒருவாறாக மூச்சுத் திணறிக் கொண்டு நூற்றுக் கால் மண்டபம் போய்ச் சேர்ந்தேன். போகிற வழியில், குறுக்கே ஒரு வீதி இருந்ததையும், அதில் மக்கள் வசித்ததையும் கண்டு ஆச்சரிய முற்றேன். மலேக்கோட்டையிலே கோயில்தான் உண்டு என்று நினைத்தேன்; ஊர் ஒன்று இருப்பது அது வரை எனக்குத் தெரியாது.

நூற்றுக்கால் மண்டபத்தின் நடுவே,பரமசிவம் தமது சகாக்களுடன்·வீற்றிருந்தார். அவரை ஒரு முறைதான் நேரில் பார்த்திருந்தாலும்,சுலபமாக அடையாளம் கண்டு கொண்டேன்.

பரமசிவம் என்னை அன்புடன் வரவேற்று அமரும் படி கூறினார். மலேமீது ஏறுவதற்குப் பயப்படும் மனிதர் களில் நான் ஒருவன் என்று அவருக்கு ஏற்கெனவே தெரியுமாததால், என்னை உற்சாகப்படுத்துவதற்காகப் பசும் பால் கொடுத்து உபசரித்தார். பின்னர் அவர் வழி காட்ட, அவரைத் தொடர்ந்தேன்.

வழியில் ஒரு புத்தகக்கடை. அங்கே மலேக்கோட்டை சம்பந்தமான படங்களும், வழிகாட்டிப் புத்தகங்களும், சமய நூல்கள் பலவும் விற்பனைக்காக வைக்கப் பெற்றி ருந்தன. அங்கிருந்த வழி காட்டிப் புத்தகம் ஒன்றை எடுத்து,எனக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார் பரமசிவம். கடைக்காரருக்கு அவர் பணம் கொடுக்கவில்லை. "கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்ப

தாய்''ப் பழமொழி ஒன்று உண்டு. பரமசிவமாய் இருந்தால் அப்படியும் செய்யலாம் போலும்" என்று நினைத்தேன். ஆனால் பரமசிவம் கடைக்காரரிடம் மிக மெதுவான குரலில், "பிறகு வந்து பணம் பெற்றுக்கொள்'' என்று கூறியது என் காதில் விழுந்தது.

''நான் மட்டும் கடன் வாங்கவில்லை. பரமசிவமும் கூட கடன் வாங்குகிறார்" என்பதை நேரில் பார்த்த பொழுது எனக்கு ஆறுதல் உண்டாயிற்று.

சிறிது தூரம் சென்ற பின்னர், கோயிலுக்கு ஒரு புறமும், உச்சிமலைக்கு எதிர்ப் புறமும் வழிகள் இருந்தன. உச்சி மலைக்குப் போகும் வாயிற் கதவுபூட்டப் பெற்றிருந்தது.

தினந்தோறும் மாலை ஆறு மணிக்கு உச்சிமலைக்குச் செல்லும் வாயிற் கதவைப் பூட்டி விடுவது வழக்கம். சுவாமி தரிசனம் செய்வதாகக்கூறி, இரவு நேரங்களில் உச்சி மலைக்குச் சென்றவர்களில் ஒரு சிலர், மலையிலிருந்து விழுந்து தற்கொலை செய்துகொண்டார்களாம். சிலருடைய செய்கையால், பலருக்குத் துன்பம் நேருவது இயல்பு.

பரமசிவத்தின் உத்தரவுப்படி வேலைக்காரர் கதவைத் திறந்தார். சில படிகள் ஏறியபின், ஒரு குகையை அடைந்தோம்.

''ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன், பல்லவ மகேந்திர வர்மன் கட்டிய குகை இது. இங்குள்ள கோயிலில் சிவபெருமான் எழுந்தருளியுள்ளார். அவருக்கு அருகில் உள்ள உருவம் பல்லவ மகேந்திர வர்மன்.

"இந்தச் சுவர் முழுவதும் உள்ள எழுத்துக்களைப் பாருங்கள். இவைதான் கல்வெட்டு என்பது. 'திருச்சி

அந்தாதி' என்ற பெயரால் நூற்று நான்கு பாடல்களை இதில் செதுக்கி யுள்ளார்கள். இந்த எழுத்துக்களை நீங்கள் முதலில் படிப்பது கஷ்டம். சிறிது பழகிவிட்டால் சுலபம். இந்த அந்தாதியில் ஒரு பாட்டின் ஓர் அடி மிகவும் சுவையுள்ளது. தானுவைத் தானுவாக்கித் தானுவும் தானுவானன், என்பதே அது'' என்றார் பரமசிவம்.

தானு என்ற வார்த்தை நான்கு முறை ஒரே அடியில் அமைந்ததும், அதைக் கூறிய போது உண்டான ஒலியும் எனக்கு இன்பத்தை அளித்தன.

''இதன் பொருள் உங்களுக்குத் தெரியுமா?'' என்று கேட்டார் பரமசிவம்.

பரமசிவமே எனது தமிழறிவைப் பரிசோதிக்க விரும்பினால் என் கதி என்ன ஆகும்? 'தெரியாது' என்பது தான் என் முகத்தில் தெளிவாக எழுதியிருக்கிறதே! அவர் முகத்தை நோக்கினேன்.

''தானு என்றால் அழியாத பொருள். ஆண்டவன் அழியாத பொருள் அதைப் போலவே இந்தக் கல்லும் அழியாத பொருள். அழியாத பொருளாகிய ஆண்டவனை அழியாத பொருளாகிய கல்லினால் அமைத்து, அத்துடன் அமையாது தன்னுடைய உருவத்தையும் அழியாத பொருளாகிய கல்லினால் செய்து, அதனை ஆண்டவனுக்கு அருகில்வைத்து, என்றும் அழியாத தன்மையை அடைந்தான் மகேந்திர வர்மன் என்பது பொருள்'' என்றார் பரமசிவம்.

வசனத்தையே கவியாக எழுதும் இக் காலத்துக் கவிஞர் சிலரின் கவிக்கும் பரமசிவம் கூறிய பழங்காலத்துக் கவிக்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டு வியந்தேன்.

"ஆலயத்தின் முன்னே நிற்கும் இந்த இருவரும் துவாரபாலகர்கள். ஆரம்ப காலத்தில் கட்டிய கோயில் களில் துவாரபாலகர்களே இல்லை. பல்லவர்கள் காலத் தில்தான் இவர்கள் தோன்றினார்கள்" என்றார் பரமசிவம்.

"துவார பாலகிகளையும் நான் பார்த்திருக்கிறேன்" என்றேன்.

"துவார பாலகிகள் அம்மன் கோயிலில் தான் இருப் பார்கள். இது சுவாமி கோயிலானதால் இங்கிருப்பவர்கள் துவாரபாலகர்கள். பல்லவர் காலத்துத் துவாரபாலகர்கள் மிக்க எளிமை யானவர்கள். துவார பாலகர்கள் கம்பீர மாகத் தோன்றினால்தான் ஆண்டவன் சந்நிதிக்கு மதிப்பு அதிகமாகும் என்று சோழர் கருதினர். எனவே சோழர் காலத்தில் அமைந்த துவாரபாலகர்கள், கையில் ஆயுதங் களோடு கம்பீரமாகத் தோற்றமளிப்பார்கள்.

"நாயக்க மன்னர்கள் இன்னும் ஒருபடி முன்னே சென்றார்கள். நாயக்கர் காலத்துத் துவார பாலகர்கள் கம்பீரமாகத் தோன்றுவதோடு மட்டுமல்லாமல், தமது ஆள்காட்டி விரலை உயர நீட்டிக் காண்பிப்பார்கள். எதற் காக அவ்வாறு காட்டுகிறார்கள் தெரியுமா?" என்றார் பரமசிவம்.

வழிகாட்டிகள் கடமை விளக்கிச் சொல்லுவது, அன் றியும் நாம் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லுவ தும் அவர்கள் கடமை. ஆனால் பரமசிவம் அடிக்கடி என்னைக் கேள்விகள் கேட்டுத் திணற அடித்தார்.

மலைக்கோட்டை அடிவாரத்திலுள்ள வழிகாட்டி களில் யாரையாவது ஒருவரை நான் ஏற்பாடு செய்திருந் தால்-அவருக்குக் கால் ரூபாயோ அல்லது அரை ரூபாயோ கொடுத்தால் போதும் என்று நினைக்கிறேன்-

அவர் நம்முடன் வந்து தமக்குத் தெரிந்ததையும் தெரியாததையும் தப்பும் தவறுமாகச் சொல்லிக் கொண்டேயிருப்பார். நிச்சயமாக நம்மைக் கேள்விகள் கேட்க மாட்டார். இதை விட்டு விட்டுப் பரமசிவத்திடம் வந்து அகப்பட்டுக் கொண்டோமே; பெரிய இடத்துச் சமாசாரமே இப்படித்தான் என்று என் மனம் சலித்தது.

"நாம் கோயிலுக்குச் செல்கிறோம். அங்கே பல மூர்த்திகளைத் தரிசிக்கிறோம். எத்தனை மூர்த்திகளைத் தரிசித்த போதிலும் 'ஒருவனே தெய்வம்' என்பதைத் தமது ஆள்காட்டி விரலால் உணர்த்துகிறார் நாயக்கர் காலத்துத் துவாரபாலகர். நம் நாட்டுச் சிற்பங்கள் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு தத்துவம் அடங்கியிருக்கும்" என்றார் பரமசிவம்.

அங்கிருந்து மணிமண்டபம் சென்றோம். பெயரிலிருந்தே மண்டபத்தில் உள்ள பொருள் என்னவென்று தெரியும். மண்டபத்தில் மணி இருந்தது. அதை அருகில் சென்று பார்க்க மர ஏணி ஒன்று இருந்தது. வழக்கம் போல, பரமசிவம் முன்னே செல்ல, நான் பின் தொடர்ந்தேன். இருட்டாக இருந்ததால், அந்த ஏணியின் பாதியிலேயே நின்று விட்டேன்.

"இந்த வெண்கல மணியின் கனம் ஏழு டன். சுற்றளவு ஐந்தடி. இம் மணியால் உண்டாகும் ஓசை மூன்று மைல் சுற்றளவுக்குக் கேட்கும். இவ்வளவு பெரிய மணியை இங்கு தூக்கிக் கொண்டு வந்து பொருத்தியது தான் ஆச்சரியம்" என்றார் பரமசிவம். அதைவிட எனக்கு ஆச்சரியமாக இருந்தது, அந்த ஏணியின் மெலிந்த படிக்கட்டுகள் என்னைத் தாங்கிக் கொண்டிருந்ததுதான்.

ஏணியிலிருந்து இறங்கிய பொழுது மணி ஏழு. அங்கிருந்து ஊரைப் பார்த்தேன். கடைத் தெருவின்

காட்சிதான் எனது கவனத்தை ஈர்த்தது. திருச்சி பெரிய கடைத் தெருவில் பகல் நேரத்தில் சென்றிருக்கிறேன். வெயில், வியர்வை, தூசி, குப்பை, (பக்கத்துச் சந்துகளிலிருந்து வரும்) துர்நாற்றம், பலவிதமான உரத்த சப்தம் இந்தச் சூழ்நிலையில் பெரிய ஜனசமுத்திரம், இவற்றிற்கிடையே செல்லும் பலவிதமான வண்டி வாசிகள்; இது தான் திருச்சி பெரிய கடைத் தெரு. ஆனால் மணி மண்டபத்திலிருந்து பார்த்தபொழுது பெரிய கடைத் தெரு எவ்வளவு அழகாகவும் பிரகாசமாகவும் இருந்தது தெரியுமா? விளக்குகளின் வெளிச்சத்தைக் கொண்டு பார்த்தால், அதனை நியூயார்க் நகரின் மூலையிலுள்ள ஒரு சிறு பகுதிக்கு ஒப்பிடலாம்.

அங்கிருந்து உச்சிப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்றோம். படிகள் ஏற ஏற தூய இனிய காற்றை அனுபவித்து மகிழ்ந்தோம். உச்சிப் பிள்ளையாரைக் கண்டபொழுது, எனது உச்சி குளிர்ந்தது. அத் திருக் கோயிலை வலம் வந்தபொழுது, அங்கு வீசிய காற்றை, புயல் காற்று என்றே சொல்லவேண்டும். வாழ்க்கைப் புயலிலே அகப்பட்டுத் தவிப்பவர்களுக்கு வழிகாட்டுபவர் அல்லவா பிள்ளையார்!

பல ஆண்டுகளுக்குமுன்னே கண்டனூர் என்ற ஊரில் கார்த்திகைச் சோமவார உற்சவத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடி வந்தார்கள். அப்பொழுது நான் பள்ளிச் சிறுவன். திருநாளில் சுவாமி திருவீதி வலம் வருவார். அப்பொழுது தமிழ் நாட்டில் பிரசித்தி பெற்ற நாதசுர, பாண்டு வித்துவான்களின் கச்சேரியும், தேவாரக் கோஷ்டியும் வேத பாராயணக் கோஷ்டியும் முன்னும் பின்னும் செல்வது வழக்கம். அத்திருநாளிலே, வயதான ஒரு பெரியார் தலையிலும், கழுத்திலும்,

கைகளிலும் திருநீறும் உருத்திராக்கமும் பூண்டு, ஒரே காலில் நர்த்தனம் ஆடிக் கொண்டே, பக்திப் பாடல்கள் சிலவற்றைப் பாடுவார். அவரைச் சுற்றி எப்போதும் சிறுவர்கள் கூட்டம். அவர்களிலே நானும் ஒருவன். பாடல்களைக் கேட்பதற்காக நாங்கள் அவர் பின்னே சுற்றுவதில்லை: அவர் கொடுக்கும் கற்கண்டுகளுக்காகவேதான் அவருடன் சுற்றுவோம். அவர் சொல்லுகிற பாட்டுக்களை எவ்வளவுக் கெவ்வளவு உரக்கச் சொல்லுகிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு அதிகமாகக் கற்கண்டுகள் கிடைக்கும்.

சிவவேடப் பொலிவுடன் விளங்கிய அப் பெரியார் பாடியவை, குழந்தைகளும் புரிந்து கொள்ளக்கூடிய எளிய பாடல்களே.

"பிள்ளையாரப்பா பெரியப்பா
பிழைக்கும் வழியைச் சொல்லப்பா"

என்ற இரண்டு அடிகள்தான் நினைவில் இருக்கின்றன.

'பிழைக்கும் வழி' என்பது உலகத்தில் பிழைக்கும் வழி அன்று; உய்யும் வழியே யாகும். ஏனென்றால் அப் பெரியார் உலகில் பிழைக்கும் வழியைத் தெரிவதற்காக குழந்தைகளுக்குக் கற்கண்டு வழங்கி,ஒரே காலில் நின்று மணிக் கணக்கில் ஆடிப் பாடியிருக்க மாட்டார்.

உச்சிப் பிள்ளையாரைத் தரிசித்தபொழுது இந்தப் பாட்டு எனது நினைவுக்கு வந்தது.

உய்யும் வழியை உச்சிப்பிள்ளையார் நிச்சயமாகக் காட்டுவார்-நம்புகிறவர்களுக்கும் விரும்புகிறவர்களுக்கும்.

உச்சிப் பிள்ளையார் கோயிலைப் பார்த்தபொழுது சில எண்ணங்கள் தோன்றின,

நியூயார்க் நகரிலுள்ள எம்பையர் ஸ்டேட் கட்டிடம் 1248 அடி உயரமுள்ளது. அக்கட்டிடத்தின் உச்சியில் இருப்பது காப்பி ஹோட்டல்.

பாரிஸ் நகரில் உள்ள உலகப் புகழ்பெற்ற எப்பெல் கோபுரத்தின் உயரம் சுமார் தொள்ளாயிரம் அடி. அதில் பாதி உயரத்தில் அமைக்கப் பெற்றிருப்பது காப்பி ஹோட்டல்.

ஜெர்மனியில் மேற்குப் பெர்லின் நகரில் ஒரு பெரிய கோபுரம் இருக்கிறது. பாரிஸ் கோபுரத்தில் உள்ளதைப் போலவே அங்கும் ஒரு காப்பிஹோட்டல்.

ஸ்வீடன் தேசத்துத் தலைநகரான ஸ்டாக்ஹோமில், இருபது மாடிகளுக் கதிகமான ஒரு பெரிய கட்டிடம் இருக்கிறது. அக் கட்டிடத்தின் உச்சியில் உள்ளது ஒரு காப்பி ஹோட்டல்.

சாதாரண காப்பி ஹோட்டல்களைவிட, மேற்கண்ட இடங்களில், பண்டங்களின் விலை இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமாய் இருக்கும். பாரிஸில் உள்ள எப்பெல் கோபுரத்து காப்பி ஹோட்டலில், அதிகப் பணம் கொடுத்துச் சாப்பிட்டவர்களில் ஒருவர், காந்தியடிகள்.

உச்சியில் ஆண்டவனை வைத்து வணங்கினார்கள் நமது முன்னோர்கள்! உச்சியில் காப்பி ஹோட்டல்களை வைத்தனர் மேலை நாட்டினர்!

உச்சிப் பிள்ளையார் கோயிலுக்குக் கீழேயுள்ள படிக் கட்டுகளில் உட்கார்ந்து பரமசிவமும் நானும் பல விஷயங் களைக் குறித்து உரையாடினோம்.

பின்னர் இருவரும் கோயிலுக்குச் சென்றோம். சுவாமி யின் பெயர் தாயுமானவர்.

"தாயுமானவர் என்றால் பிற்காலத்தில் வாழ்ந்த முனிவர் தாயுமானவர் அல்லர். ஆண்டவனுக்கு அப் பெயர் வந்ததற்கு ஒரு கதை உண்டு" என்றார் பரமசிவம்.

கதை யென்றதும் ஆவலுடன் கேட்டேன்.

"ரத்தினாவதி என்ற வைசியப் பெண் ஒரு காலத்தில் திருச்சியில் வசித்து வந்தாள். அவள் சிவபக்தியில் சிறந்தவள். குழந்தை பெறவேண்டிய காலம் நெருங்கிய போது, அவள் வெளியூரிலிருந்த தனது தாயின் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள். தாய் காவிரியைக் கடந்துவர வேண்டும். காவிரியில் திடீரென்று வெள்ளம் வந்துவிட்டது. காவிரியைக் கடக்க அக் காலத்தில் பாலம் கிடையாது. எனவே ஆண்டவன், பெண்ணின் தாயாக உருவம் கொண்டு, ரத்தினாவதிக்கு உதவி செய்தார். வெள்ளம் தணிந்தபின் உண்மையான தாயார் வீட்டுக்கு வந்தாள். இரண்டு தாயார்களை ஒரே சமயத்தில் காண, ரத்தினாவதி திடுக்கிட்டாள். அப்பொழுது வேட தாரியான தாய் மறைந்தாள். ஆண்டவன் ரிஷபவாகன ரூடராகக் காட்சி யளித்தார். எளிய பெண்ணுக்குத் தாயாகவும் அவர் இருந்து உதவி செய்ததால், அவருக்குத் தாயுமானவர் என்ற பெயரும் ஏற்பட்டது. ஆண்டவனின் கருணைக்கு எல்லையு முண்டோ?" என்றார் பரமசிவம்.

கண்ணைப் பறிக்கும் கலை வனப்புடைய அற்புதமான விக்கிரகங்கள் பல, பிராகாரத்தில் இருந்தன.

சந்நிதிக்குச் சென்றதும் லிங்கத்தின் பெரிய வடிவைக் கண்டு அதிசயித்தேன். ஏழு அடி உயரமுள்ள அந்த லிங்கத்துக்குப் பதினையாயிரம் ரூபாய் செலவில் வெள்ளி நாகாபரணம் செய்திருப்பதாக அறிந்தேன்.

"ஏழு அடி உயரமென்ருல், அது ஏழு தத்துவங்களைக் களைக் குறிப்பிடுகிறது என்பது பொருள். தஞ்சைப் பெரிய கோயிலில் உள்ள லிங்கத்தின் உயரம் ஒன்பது அடி. தமிழ் நாட்டிலேயே மிகப் பெரிய லிங்கம், கும்ப கோணத்தை யடுத்து திருபுவனத்திலிருக்கிறது. அதன் உயரம் பதினேரு அடி" என்ருர் பரமசிவம்.

சந்நிதானத்தில் அப்பொழுது போதுமான வெளிச்ச மில்லை. அர்ச்சகர் ஒருவர் கர்ப்பூர தீபாராதனை செய்தார். பின்னர் அவர் பெரிய கிண்ணத்தை எடுத்துவந்து அதி லிருந்து கரண்டியால் தீர்த்தம் வழங்கினுர். இருட்டில் ஒன்றும் தெரியவில்லை யாதலால், அந்த தீர்த்தத்தை வாங்கி உடனே பயபக்தியுடன் சாப்பிட்டுவிட்டேன். ஆனுல் அதன் ருசி வேறு விதமாக இருந்தது. இம்மாதிரி யான தீர்த்தத்தை இதற்குமுன் நான் எங்கும் சாப்பிட்ட தில்லை. இருந்தாலும், ஆண்டவன் பிரசாதத்தைக் குறை கூறக் கூடாதென்று பேசாதிருந்தேன்.

"நீங்கள் அதைத் தீர்த்தம் என்று நினைத்துச் சாப் பிட்டு விட்டீர்கள். அது சந்தனம் அல்லவா? பாதகமில்லை உடம்புக்கு நல்லதுதான்" என்ருர் பரமசிவம்.

நான் அறியாமையால் சந்தனத்தைச் சாப்பிட்ட வருத்தத்தைக் காட்டிலும், அந்த விவரம் பரமசிவத்துக் குத் தெரிந்து விட்டதே என்பதுதான் அதிக வருத்தத் தைக் கொடுத்தது.

அடுத்தது அம்மன்கோயில். மட்டுவார் குழலியம்மை என்னும் அழகிய பெயருடைய அம்மனை நன்கு தரிசித் தோம்.

பின்னர் கலைச் செல்வம் நிரம்பிய பெரிய மண்டபத் துக்கு வந்தோம். தமிழ் நாட்டின் கோயிற் கலையைப் பற்றிய பிரசங்கம் ஒன்றைஆரம்பித்துவிட்டார் பரமசிவம்.

சந்தனத்தைக் குடித்ததால் உண்டான வேதனை ஒரு புறம்; பசி ஒரு புறம்; இந் நிலையில் பரமசிவமே நேரில் வந்து கலையைப் பற்றி விளக்கிய போதிலும், அவை என் காதுகளில் ஏறவே யில்லை.

எனது நிலையை உணர்ந்த பரமசிவம் நேராக என்னை நூற்றுக்கால் மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார். அவருடைய அன்புக்கு நன்றி செலுத்தினேன்.

''அடுத்த முறை நீங்கள் வரும்பொழுது நான் இங்கிருக்க மாட்டேன். சுவாமி மலையில் இருப்பேன்'' என்றார் பரமசிவம்.

"சுவாமி மலை திருச்சி மலைக் கோட்டையைவிட உயரமானதா?" என்று கேட்டேன்.

''தஞ்சை மாவட்டத்தில் மலைகள் ஏது? சுவாமிமலை என்பது ஒரு மேடு. ஆனால் பாடல் பெற்ற ஸ்தலம். என்னை அந்த ஊர் தேவஸ்தானத்துக்கு மாற்றியிருக்கிறார்கள்'' என்றார் பரமசிவம்.

இதுவரை என்னுடன் இருந்தவர் கற்பனைப் பரமசிவம் அல்லர்; திருச்சி மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் கோயில் தேவஸ்தான நிர்வாக அதிகாரி ஸ்ரீ எம். பரமசிவம் என்னும் எம். ஏ. பட்டம் பெற்ற இளைஞர் ஆவர்.

நன்றி மறப்பது நன்றன்று, அன்பர் பரமசிவத்துக்கு நன்றி செலுத்திக் கடிதம் எழுத உட்கார்ந்தேன். அப்போது ஓர் தமிழ் மாதப் பத்திரிகை யொன்று என் கைக்குக் கிட்டியது. அப்பத்திரிகையில் ஒரு பாவாணர் 'நிர்வாக அதிகாரி'என்பதற்குச் சரியான தமிழ் வார்த்தை 'கருமவிதி' என்று எழுதியிருந்தார்.

என்னை நன்கு உபசரித்து, புத்தகம் ஒன்றை அன்பளிப்பாகக் கொடுத்து, இரண்டு மணி நேரத்திற்கு அதிகமாகக் கோயில் முழுவதையும் சுற்றிக் காட்டிய அன்பரைச் 'கருமவிதி' என்றழைக்க என் மனம் துணியவில்லை. என்ருலும் அவருக்கு எழுதிய கடிதத்தில், 'நிர்வாக அதிகாரி' என்பதற்குத் தனித் தமிழில் 'கருமவிதி' என்ற வார்த்தையை வழக்கில் கொண்டுவர வேண்டும் என்று ஒரு பாவாணர் எழுதியுள்ளார். இது தங்களுக்குச் சம்மதந் தானு?'' என்று கேட்டிருந்தேன்.

அன்பர் பரமசிவத்திடமிருந்து இதுவரை பதிலே இல்லை.

தமிழ் ஆட்சிமொழியாகவேண்டிய சூழ்நிலையில் தாம் நிர்வாக அதிகாரியாக இருக்க நேர்ந்தது, தமது 'கருமவிதி' என்று அவர் கருதியிருக்கக் கூடும்!

Edited, Printed and Published by A. K. CHETTIAR at Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

# கவுண்டர் & கம்பெனி
## (பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:
கூட்ஸ் ஷெட் ரோடு
பொள்ளாச்சி.

கிளை ஆபீஸ் & ஷோரூம்
7/69, ஜெயில் ரோடு
கோயமுத்தூர்

## கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

---

**நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,**

மானேஜிங் டைரக்டர்.

டெலிபோன் 51 & 111 தந்தி "BLISS"

# இராஜபாளையம் மில்ஸ் லிமிடெட்

## இராஜபாளையம்

யோகம்

டிரேட் மார்க்

யோகம்

**மொத்தக் கதிர்கள் 24,996+11,040**

உயர்ந்த ரக 20, 26, 60, 80 கோமுடு பாவு
நூல்கள் உற்பத்திசெய்கிறோம்.

---

மானேஜிங் ஏஜண்டுகள்:

**ராம்கோ ஏஜென்ஸீஸ் பிரைவேட் லிமிடெட்**

இராஜபாளையம்

மானேஜிங் டைரக்டர்
P. A. C. ராமசாமி ராஜா